இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
# பாதுகாவலன்
PAATHUKAVALAN
Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633
மலர் : 145 | இதழ் : 17 | திகதி : 12.12.2021 | விலை : 30.00

# மரியாவும் யோசேப்பும் எமது புனித வாழ்வின் முன்னோடிகள்



## புனித யோசேப்பு ஆண்டு நிறைவில் திருத்தந்தை

கடந்த 08.12.2021 அன்று வத்திக்கானில் மூவேளைச் செப நிகழ்வில் புனித யோசேப்பு ஆண்டை நிறைவு செய்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எமது புனித வாழ்வுக்கு புனித மரியாவையும் புனித யோசேப்பையும் விட மேலான முன்னோடிகள் யாருமில்லை என்று குறிப்பிட்டார்.

அன்றைய தினம் வத்திக்கான் சதுக்கத்தில் கூடியிருந்த இளைஞர், யுவதிகளுக்கு திருத்தந்தை விஷேட செய்தியாக நாம் வாழும் இவ்வுலகில் பல தீயசக்திகள் எமை சூழ்ந்திருந்தாலும் மரியாளினதும், யோசேப்பினதும் துணையோடு புனித வாழ்வு வாழ முடியும் என்று அழைப்பு விடுத்தார். கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் 8ம் திகதி திருத்தந்தை புனித யோசேப்பு ஆண்டை ஆரம்பித்து வைத்து 'தந்தையின் இதயத்தோடு' என்ற திருமடலையும் வெளியிட்டு வைத்தார் என்பது நாம் அறிந்ததே.

## மரியன்னை பற்றிய விசுவாச சத்தியங்களை முதன்முதலாக ஏற்றுக்கொண்டவர் புனித சூசையப்பர்

### புனித சூசையப்பர் ஆண்டு நிறைவில் யாழ். குருமுதல்வர்





புனித சூசையப்பர் ஆண்டு நிறைவில் யாழ். குருமுதல்வர் அன்னை மரியா பற்றி திரு அவை தனது வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களில் நான்கு விசுவாச சத்தியங்களை பிரகடனம் செய்தது. மரியன்னை இறைவனின் தாய், அமலோற்பவி, எப்பொழுதும் கன்னி, ஆரோபணத்தாய் என்பவையே இவையாகும்.

ஆயினும், இறைவனின் தூதர் புனித சூசையப்பருக்குக் கனவில் தோன்றி 'உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஆவர் கருவுற்றிருப்பது தூய ஆவியினால் தான்' என்று சொன்ன மாத்திரத்திலேயே புனித சூசையப்பர் இந்த விசுவாச சத்தியங்களை ஏற்றுக்கொண்டு விசுவசித்தவராக மரியாவை ஏற்றுக்கொண்டார் என்று கடந்த 08.12.2021 அன்று மரியன்னையின் அமலோற்பவத் திருநாளின்போது கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்ற புனித சூசையப்பர் ஆண்டு நிறைவுத் திருப்பலியில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்விலேயே 'கனவின் புனித சூசையப்பர்' என்ற படமும் திரைநீக்கம் செய்யப்பட்டது.

## பருத்தித்துறையில் அன்பிய வளவாளர்களுக்கான கருத்தமர்வு



பருத்தித்துறை மறைக்கோட்டத்தின் அன்பிய வளவாளர்களுக்கான கருத்தமர்வு 04.12.2021 சனிக்கிழமை பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில், யாழ் மறை மாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது. காலை 10மணி தொடக்கம் மதியம் 1.30மணி வரை இக் கருத்தமர்வு இடம்பெற்றது. பருத்தித்துறை மறைக்கோட்டத் தின் அனைத்தும் பங்குகளிலிருந்தும் பங்குப் பிரதிநிதிகளும், குருக்கள் துறவிகளுக்கான பிரதி நிதிகளுமாக 58பேர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பங்கு மட்டங்களில் இருந்து அனுபவம் மிக்க இருவர் வளவாளர்களாகவும், ஒருவர் பங்குகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இணைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். பருத்தித்துறை மறைக் கோட்டத்தின் அன்பிய இணைப்பாளர் அருட்தந்தை. ஞா.ஞானரூபன் அடிகள் இக் கருத் தமர்வை ஒழுங்குபடுத்தியிருந்தார்.

## கரித்தாஸ் தாய் நிறுவனத்திற்கு வயது 70




1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று உலகில் 200 நாடுகளில் பரந்து மனித முன்னேற்றப் பணியாற்றும் கரித்தாஸ் தாய் நிறுவனத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு கடந்த 09.12.2021 அன்று யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. 02

## ஜேர்மன் தூதுவர் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு விஜயம்



ஜேர்மன் மொழிக்கான பாடசாலை களின் இணையம் (PASCH) இணைந்து வட மாகாணத்தில் ஜேர்மன் மொழி கற்பிக்கப்படும் புனித பத்திரிசியார் கல்லூரிக்குக் கடந்த 30.11.2021 அன்று ஜேர்மன் தூதுவர் Hon. Holger Seubert அவர்கள் விஜயம் மேற்கொண்டார். கல்லூரி நிர்வாகம் அவரை வரவேற்று, கல்லூரியில் ஜேர்மன் மொழி கற்கும் மாணவர்களுடனான சந்திப்பொன்றையும் நிகழ்த்தினர். 02

## அரச இலக்கிய விருதும் சான்றிதழ்களும் பெறும் எம் குருக்கள்






இலங்கை கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட 2020, 21ற்கான அரச இலக்கிய விருது வழங்கும் விழா கடந்த 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் மாநாடு இலக்கியத்திற்கான விருதினை அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு செ. அன்புராசா அடிகள் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் தேசிய விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களில் பேராசிரியர் G.V. பிலேந்திரன், அருட்திரு R. ஸ்ரலின் மற்றும் அருட் கலாநிதி போல் றொகான் ஆகியோரின் நூல்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் பங்கு

பெரும் தொற்றின் தாக்கம் இன்றைய மாணவர்களின் கல்வியை வெகுவாகப் பாதித்துள்ளது என்பது எம் பெற்றோரின் பெரும் கவலையாகும். பாடசாலைச் சமூகம் எம் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுடன் பல வழிகளில் பாடசாலை நேரங்களைக் கடந்தும் கற்பித்தல் பணியில் ஈடுபடுவது பாராட்டத்தக்கது.

இந்நிலையில் இன்று மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் முழுமையாக ஈடுபடுகின்றார்களா? என்பது கேள்விக் குறியே. அலுவலகப் பணிகளால், விபரம் தெரியாத பருவத்தில் குழந்தைகள் 'பகல்பராமரிப்பு' நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள். அங்கு பிள்ளைகள் பெற்றோரின் பாசத்திற்காக ஏங்குகின்றார்கள்.

ஒரு நாளின் 24 மணி நேரத்தில் 8 மணி நேரம் பாடசாலையில் இருக்கும் மாணவர்கள், வீட்டிற்குச் சென்று ஒரு மணி நேரம் கூட வீட்டில் தங்குவதில்லை. தனியார் கல்வி நிலையங்களுக்குச் (Tuition) செல்கின்றார்கள். அவர்கள் வந்ததும் சாப்பிட்டுவிட்டு, உறங்குவதற்குத் தான் நேரம் சரியாக இருக்கின்றது. பெற்றோரிடம் பாசமுடன் உரையாடுவதற்கு நேரம் இருப்பதில்லை. இதில் மிகவும் வருந்தக்கூடிய செயல் என்னவெனில், தாங்கள் தொலைக்காட்சித் தொடரைப் பார்க்கத் தடையாக இருக்கின்றார்கள் என்பதால், குழந்தைகளை சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்பும் அன்னையரும் இருக்கின்றார்கள். அலுவலகத்திற்குச் செல்லும் பெற்றோரோ தங்கள் பிள்ளைகளிடம் பேசுவது அரிதிலும் அரிது.

குடித்துவிட்டு வரும் தந்தை, எந்த நேரமும் சண்டைபோட்டுக் கொள்ளும் பெற்றோர். அவர்களது பொறுப்பற்ற செயல்முறைகள், பிள்ளைகளைக் கவனிக்காமல் இருத்தல், தொலைக்காட்சித் தொடர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், அலைபேசியில் அதிக கவனம் செலுத்துதல், இவைகள் மாணவரின் கல்வி வளர்ச்சியை மட்டுமல்ல, அவர்களது ஒழுக்கத்தையும் சிதற வைக்கின்றன. தவறுகளுக்குத் தூண்டுதலாக இருக்கின்றன, மன இறுக்கத்தை உண்டு பண்ணுகின்றன. எதிர்காலத்தை சீரழிக்கின்றன.

மாணவரின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியரின் பங்கு மிகப் பெரிது. என்றாலும் பெற்றோரின் ஈடுபாடும், ஒத்துழைப்பும், பொறுப்புணர்ச்சியும் இருந்தாலன்றி, அவர்களை வருங்கால வரலாற்று நாயகர்களாக உருவாக்க முடியாது.

"குழந்தையின் முதல் பாடசாலை தாயின் மடி. குழந்தையின் முதல் மறை ஆசிரியர் பெற்றோர்" என்கிறார் திருத்தந்தை 12-ஆம் பயஸ். பெற்றோர்களே தம் குழந்தைகளுக்கு முதல் குரு. பாடசாலை செல்லும் முன்னே அவர்கள் உள்ளத்தில் இறைவார்த்தையை விதைக்க வேண்டும். *"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"* எனக் கவிஞன் பெற்றோரைப் பற்றி அழகாகப் பாடியுள்ளார். பாலோடும், பழத்தோடும் ஒழுக்கத்தையும் ஊட்ட வேண்டியது பெற்றோரின் தலையாய கடமை. அவர்கள் பாடசாலை செல்லும் பருவத்தில் எல்லாவிதத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழும் பெற்றோர்கள் தாம் பெற்றதன் பயனைப் பெருமளவு அடைவார்கள்.

உணவிலும், உடையிலும், உடல் நலத்திலும் கவனம் செலுத்துவதோடு, இன்றைய கல்வி முறைகள் தங்கள் குழந்தைகளின் அறிவுத் தரத்திற்கு ஏற்றவையா என்பதைத் தெளிந்து தெரிவு செய்யவேண்டும். பிள்ளைகளின் திறமைக்கும், அறிவுத் திறனுக்கும் எட்டாத கல்வியை கட்டாயமாகத் திணிக்கக்கூடாது. அவர்களுக்கு விருப்பமில்லாத பாடத்தைக் கற்கச் சொல்லி வற்புறுத்துதல் மிகவும் தவறு. அதேவேளையில் அவர்கள் திறமைகளைப் பாராட்டி, அதற்கேற்ற கல்வியைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டுவது அவசியம். அத்துடன் அவர்கள் கற்கும் பாடங்களைப் பற்றிய விபரத்தை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

பாடசாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சுமைகளாகவோ வெறுப்புணர்வுடனோ பார்க்காது, ஆர்வத்துடனும், தோழமை உணர்வுடனும் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து ஆர்வத்துடன் செயற்பட வேண்டும். அவர்களது நண்பர்கள் நல்ல வழியில் செல்பவர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். குழந்தைகளின் வளர்ச்சிக்காகச் சில தியாகங்களைச் செய்யவும் பெற்றோர் முன் வரவேண்டும். தொலைக்காட்சித் தொடர்களின் ஈடுபாடு, வீண் செலவு, குடிபோதையில் மோகம் இவற்றைப் பிள்ளைகளுக்காகத் தியாகம் செய்வதே நல்ல பெற்றோருக்கு அழகாகும்.

இன்னும் சிறப்பாக, மாணவர்கள் இன்றைய கல்விமுறையில் வளர்ச்சிபெற உதவுவதும் சிறந்ததாகும். இவன் 'ஒன்றுக்கும் உதவமாட்டான்', 'பாடம் ஏறாது' 'மாடு மேய்க்கத்தான் இவன் லாயக்கு' என்று அவர்களை எதிர்மறையாகப் பேசுவதைத் தவிர்த்து, என் மகன்(ள்). நல்லவன் (ள்). எனக்கு உறுதுணையாக இருக்கின்றான். மரியாதை செலுத்துவதில் வல்லவன், நன்றாகப் படிக்கின்றான். இறை பக்தியுள்ளவன் எனப் பாராட்டிக்கொண்டிருந்தால், மனதில் இருக்கும் சிறு மாசுகளும் தூசுகளாகித், தூய்மையான மாணவனாக மாற வழிவகுக்கும்.

வெற்றியும், தோல்வியும், மாறி மாறி வரும் என்பதை உணர்த்த, தோல்வியில் துவண்டு விழாமல் பாதுகாக்க வேண்டும். தம் குழந்தைகளின் மீது நம்பிக்கை வைத்து, கனிவும், கட்டுப்பாடும் இணைந்த சுதந்திர வாழ்க்கையை அவர்களுக்குத் தர வேண்டும். அதிகமான கண்டிப்பு அழிவினையும் கொண்டுவரலாம் என்பதை நினைவில் கொண்டு, தோழமையுடன் வளர்த்து மாணவ சமுதாயத்தைத் இறைவனுக்கும் உலகிற்கும் தொண்டு புரியும் வீரர்களாக மாற்றுவது பெற்றோரின் கைகளில் தான் உள்ளது.

தம் குழந்தைகளின் எதிர்காலக் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடு அதிகம் இருக்கின்றது என்பது மகிழ்ச்சியான செய்தி. தம் குழந்தைகளின் உயர்கல்வியில், குழந்தைகளின் விருப்பத்திற்காகப் பொருளாதாரச் சிக்கலைச் சமாளித்தல் பெற்றோருக்கு எளிதாக உள்ளது. இந்த ஈடுபாடு தொடர்ந்து இருந்து அனைவரும் ஒத்துழைத்தால் மாசில்லாத தூய்மையான மாணவ சமுதாயம் நிச்சயமாக உருவாகும்.

**அருட்பணி எஸ்.எயின்சிலி றொஷான்**

# திருத்தந்தையின் திருப்பயணம்

## திருஅவையின் வேர்களுக்கு செல்லும் ஒரு முயற்சி

சைப்பிரசு நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளும் திருத்தூதுப்பயணம், ஐரோப்பிய நாடுகளுக்கும், இவ்வுலகிற்கும், ஒற்றுமை, மற்றும் உடன்பிறந்த உணர்வு ஆகிய விழுமியங்களை உணர்த்தும் பயணமாக அமையும் என்று வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

டிசம்பர் 2ம் திகதி முதல், 6ம் திகதி முடிய சைப்பிரசு நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் திருத்தந்தை மேற்கொள்ளும் திருத்தூதுப்பயணம் குறித்து, திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், வத்திக்கான் செய்திக்கு வழங்கிய நேர்காணலில், திருத்தந்தையின் பயணம் இவ்விரு நாடுகளுக்கும், நற்செய்தியின் மகிழ்வையும், நம்பிக்கையையும் வழங்கும் என்று கூறினார்.

திருத்தூதர்களான பவுல் மற்றும் பர்னபா ஆகியோரின் திருத்தூதுப்பணிகளால் பயனடைந்துள்ள சைப்பிரசு நாட்டிலும், கிரேக்க நாட்டிலும், திருத்தந்தை, இப்பயணத்தை மேற்கொள்வது, திருஅவையின் வேர்களுக்கு செல்லும் ஒரு முயற்சியாக இருக்கும் என்று கர்தினால் பரோலின் அவர்கள் குறிப்பிட்டார்.

சைப்பிரசு நாட்டில் தற்போது நிலவும் இறுக்கமான சூழலைப்பற்றிய கேள்வி எழுந்த போது, அந்நாட்டின் வட பகுதி மக்களுக்கும், சைப்பிரசு அரசுத்தலைவருக்கும் இடையே நிகழ்ந்த பேச்சுவார்த்தைகள், இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் முறிவடைந்ததை, கர்தினால் பரோலின் அவர்கள் குறிப்பிட்டு, அந்நாட்டில் நிலவும் சூழலுக்கு உரையாடல் மட்டுமே மிகச்சிறந்த வழி என்று, திருத்தந்தை, மூவேளை செப உரையில் கூறியதை மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

உயர்ந்ததொரு கலாசாரத்தின் பிறப்பிடமான கிரேக்க நாட்டிற்கு திருத்தந்தை செல்வது குறித்துத் தன் நேர்காணலில் குறிப்பிட்ட கர்தினால் பரோலின் அவர்கள், இந்நாடு, மத்திய தரைக் கடலோரம் அமைந்திருப்பதை நினைவுகூர்ந்து, இக்கடலில், புலம்பெயர்ந்தோர் மேற்கொள்ளும் பயணங்கள், திருத்தந்தையின் நினைவுகளிலும், பகிர்வுகளிலும் இடம்பெறும் என்று எடுத்துரைத்தார்.

மத்தியத்தரைக் கடற் பயணங்களில் மூழ்கிய பல படகுகளை எண்ணிப்பார்க்கும்போது, இந்த பெருந்தொற்றுக் காலத்தில், நாம் அனைவருமே, கடலில் செல்லும் படகுகளில் உள்ளவர்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியதைச் சுட்டிக்காட்டிய கர்தினால் பரோலின் அவர்கள், நமது படகுப்பயணம், பெருந்தொற்று, காலநிலை மாற்றம் ஆகியவை உட்பட, பல புயல்களால் சூழப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டார்.

ஆர்த்தடாக்ஸ் சபைகளின் தாக்கங்களை அதிகம் கொண்டுள்ள சைப்பிரசு நாட்டிலும், கிரேக்க நாட்டிலும் திருத்தந்தை மேற்கொள்ளும் திருத்தூதுப்பயணம், கத்தோலிக்க திருஅவைக்கும், ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கும் இடையே இன்னும் உறுதியான ஒரு பிணைப்பை உருவாக்கும் என்று தான் நம்புவதாகக் கூறி, திருப்பீடச் செயலர், கர்தினால் பரோலின் அவர்கள் தன் நேர்காணலை நிறைவு செய்தார்.

# மரியாவை எடுத்துக்காட்டாகக் கொள்ளுங்கள்

**- திருத்தந்தை**

ஸ்பெய்ன் நாட்டின் பார்சலோனா உயர் மறைமாவட்டத்தில் உள்ள சாக்ரேடா பமிலியா பெருங்கோவிலின் அன்னை மரியா கோபுரத் திறப்புவிழாவில் பங்குகொண்ட திருப்பயணிகளுக்குத் தனது நெருக்கத்தை வெளிப்படுத்தி செய்தி ஒன்றைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில்: அன்பு நண்பர்களே, இணைந்து பயணிக்கும் உங்களின் திருஅவை பயணத்திலே, அன்னை மரியாவின் இந்தக் கோபுரம் உங்களுக்காக ஒளிர்கிறது எனக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விசுவாசிகள், குழந்தைகள், இளம்பருவத்தினர், இளையோர், முதியோர், அர்ப்பண வாழ்விற்கு அழைக்கப்பட்டோர், குருமாணவர்கள், திருத்தொண்டர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரும் பார்சலோனாவின் பேராயர், மற்றும், அவரது மூன்று துணை ஆயர்களோடு இணைந்து பயணிக்கிறீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு அவை உடனான உங்களின் இந்தப் பயணத்திலே, புகழ்பெற்ற கட்டடக் கலைஞர் அன்ரன் கௌடி அவர்கள் கண்ட கனவான விண்மீன், உங்கள் மேல் ஒளிரும் அன்னை மரியாவின் இந்தக் கோபுரதிற்கு மணி மகுடம் சூட்டட்டும் என்று தொடர்ந்து கூறினார்.

அன்னை மரியா, நற்செய்தி அறிவிப்பின் விண்மீனாக விளங்குகிறார். ஆகவே, அன்னை மரியாவின் இந்தக் கோபுரத்தை அணி செய்யும் அந்த விண்மீனை நோக்கி நமது கண்களை உயர்த்தும் நாம், அவரைக் குறித்துத் தியானிக்க அழைக்கப்படுகிறோம். ஏனென்றால், அன்னை மரியாவின் புரட்சிகர இயல்பான இளகிய மனம், அன்பின் பாசம் ஆகியவற்றில் நாம் நம்பிக்கை கொள்கிறோம் என்று தன் செய்தியில் திருத்தந்தை எடுத்து ரைத்தார்,

கடவுளின் முன்பாகத் தனது தாழ்ச்சியையும் வெளிப்படைத்தன்மையையும் வெளிக்காட்டிய அன்னை மரியா, அவருக்கான கடவுளின் திட்டத்தில் சரியான இணக்கத்துடன் சென்ற ஒரு அழகிய கலைப் படைப்பாகத் திகழ்கிறார் என்று, திருத்தந்தை அவர்கள் குறித்துக் காட்டினார்.

உலகப்புகழ் பெற்ற ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் Sagrada Familia பெருங்கோவிலின் அன்னை மரியா கோபுரத்தின் உச்சியில் ஏற்றப்பட்ட சுமார் 5.5 டன் எடையுள்ள 12 புள்ளி விண்மீன் சுடர்விடத் தொடங்கியது.

## ஜேர்மன் தூதுவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ் விஜயத்தின் போது மாணவர்கள் ஜேர்மன் மொழியிலான பாடல்களையும் உரைகளையும் நிகழ்த்தியதோடு தமிழ் கலாசார நடனங்களையும் ஆற்றுகைப்படுத்தினர்.

தூதுவர் தமது உரையில் 2023 ஆம் ஆண்டு ஜேர்மன் - இலங்கை இடையிலான நட்புறவின் 70 ஆம் ஆண்டு நிறைவு செயற்பாடுகளுக்கு புனித பத்திரிசியார் கல்லூரியின் ஒத்துழைப்பை நாடி நின்றதோடு, கடந்த பத்து ஆண்டுகளாக இக் கல்லூரி ஜேர்மன் மொழி, கலாசார, பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கி வரும் ஊக்கத்திற்கு நன்றி கூறி வாழ்த்தி நின்றார்.

## கரித்தாஸ் தாய் நிறுவனத்திற்கு ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்குனர் அருட்பணி. யூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகள் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளில் சர்வ மதத் தலைவர்களும், பயனாளிகளின் பிரதிநிதிகளும், மனித முன்னேற்ற நிலைய பணியாளர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

சிறப்பு நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக உளவளத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், எஸ்.மேனகா அவர்களால் '*பழைய நினைவுகளை ஆற்றுப்படுத்தல்*' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

## காவலன் கலசம்

# எம் இரக்கச் செயல்களில் இயேசு பிறக்கட்டும்

**2021** ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் ஒருமுறை ஒரு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட இத் திருவருகைக் காலப்பகுதியில் எம்மை ஆன்மீக ரீதியாகத் தயார்ப்படுத்தி வருகின்றோம். பெரும் தொற்றின் காரணமாகவும், அரசியல் நிலைமையினாலும், பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம். வறுமையும், ஏழ்மையும் பலரை வாட்டும் சூழமையிலே குழந்தை இயேசு மீட்பராக எம் மத்தியில் பிறக்க இருக்கின்றார். கிறிஸ்து இயேசுவின் இப்பிறப்பு விழாவில் நாம் பல்வேறு இரக்கச் செயல்களில் நேரடியாக ஈடுபட அழைக்கப்படுகின்றோம். இச்சிறிய கட்டுரையிலே நாம் எப்பேற்பட்ட இரக்கச் செயல்களில் ஈடுபடலாம் என்பதைச் சிந்திக்க சில கருத்துக்களை முன்வைக்கின்றோம்.



**பசியாய் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல்**

அன்னை திரேசா வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத பல அனுபவங்களில் இதுவும் ஒன்று. அவருக்கு மேலை நாடுகள் ஒன்றில் பாராட்டு விழா. அதுவும் உலகப் புகழ்பெற்ற நோபல் பரிசு பெற்றமைக்கு. விழா முடிந்து, விருந்து நிறைவுற்று அறிஞர்கள் விடைபெறும் நேரம். பலர் வந்து அன்னையின் அறைக்கு முன்னால் அணிவகுத்துள்ளனர். அன்னையைக் காணோம். பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியாத பணியாளர்கள், விருந்து மண்டபத்துக்குப் படையெடுக்கின்றனர். அங்கு விருந்தினர்கள் விட்டுச்சென்ற கெட்டுப்போகாத உணவுகளைப் பைகளில் அன்னை திரேசா சேகரித்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி எல்லார் நெஞ்சையும் தொட்டது! ஆம், பசியின் கொடுமையை அனுபவித்தவர்களுக்கே தெரியும். கண்டோர் உணர்வு சிலிர்க்கின்றது.

'பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்' என இன்றும் பலர் நம் செவிபடக் கூறுவதை நாம் கேட்க முடியும். பசியோடு இருக்கும் போது எந்தப் போதனைகளையும் புலன்கள் ஏற்பதில்லை என்பது பலரது அனுபவ உண்மை.

இன்றும் கூட பல இடங்களில் 'சாப்பிட்டீங்களா?' என்று வாஞ்சையோடு கேட்கும் குரல்கள் 'நற்பண்புகளாக' நின்று நிலவுகின்றன நமக்கு மகிழ்வும் மன நிறைவும் அளிக்கின்றன. இதனால் தானோ என்னவோ திருவள்ளுவர்,

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"**
(குறள்: 322)

எனப் பகர்ந்துள்ளார். இதய அன்பர் இயேசுவும் பசியுற்ற மாந்தர்கள் மேல் பரிவு கொண்டு (மத் 15:32-39, மாற் 8:1-10, யோவா 6:1-15, லூக் 9:10-17) உணவளித்த உன்னத நிலைப்பாட்டை உலகமே பாராட்டுகிறது.

நாமும் நன்மனத்தை வெளிப்படுத்தும் விதத்தில் பசியுற்றோருக்கு உணவளித்து, உண்பவரில் இயேசுவின் முகத்தைக் காணவேண்டும். இன்றும் கிராமப்புறங்களில் ஒரு சொல்லடை உண்டு. இதை நினைவில் கொள்வது எத்தரப்பினருக்கும் எந்நிலையிலும் நன்மை பயக்கும் என்பது மறுக்கவியலா உண்மையாகும்: "கட்டியாய் உண்பதை கரைத்துக் குடிப்போம்". அதாவது, பகிர்வதற்கு ஆளில்லாதபோது முழுமையில் உண்பதைத் தேவையில் இருப்போருடன் பகிர்ந்து உண்போம் என்பதே அதன் பொருள்.

**தாகமாயிருப்பவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தல்**

18-ஆம் நூற்றாண்டில் சின்னப்பன் - சின்னம்மா தம்பதியர் வாழ்ந்து வந்தனர். கடும் பஞ்சம் ஏற்பட்ட போது அவர்கள் பல இடங்களில் தண்ணீர்ப் பந்தல்' என்று சொல்லக்கூடிய விதத்தில் ஆங்காங்கே பந்தல் அமைத்து குடி தண்ணீருடன் கஞ்சியும் வார்த்தனர். இத்துடன் அவர்கள் செய்த தருமகாரியங்களின் காரணமாக அவர்களது பெயர் இன்றும் நிலைத்துள்ளது. இதுபோல் பலர் தாகம் தணிக்கும் தன்னிகரற்ற பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உலக மக்கள் அனைவரையும் மீட்கும் தாகம் கொண்ட இயேசு கல்வாரியில் "தாகமாய் இருக்கிறது' (யோவா 19:28) என்றார். படை வீரர் தண்ணீருக்குப் பதில் புளித்த காடியைக் கொடுத்தார்கள். இன்று உலகில் குடி தண்ணீருக்கு ஒரு கணிசமான தொகை செலவு செய்யக் கூடிய நிலை யில் பலர் வாழ்கின்றனர். சமாரியப் பெண்ணிடம் இயேசு குடிக்கத் தண்ணீர் கேட்டார் (யோவா 48), ஆனால் அவரே நிலைவாழ்வை அளிக்கும் பொங்கி வரும் ஊற்று என்பதை அப்பெண்ணுக்கு வெளிப்படுத்தவே இது நிகழ்ந்தது. தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பது மற்ற புண்ணியங்களைவிட மிகவும் பெரியது எனப் பெரியவர்கள் கூறுவர்.

**ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை கொடுத்தல்**

'வோஷிங்டனில் திருமணம்' என்ற கதை நூலில் இடம் பெற்ற ஒரு நிகழ்ச்சி: அமெரிக்கப் பணக்காரர் ராக்பெல்லர் ஒரு திருமணத்துக்கு அழைக்கப்பட்டார். அத்திருமண நாளில் அவர் விருந்து நேரத்திற்குச் செல்கிறார். அவர் திருமண உடையை அணிந்திருக்கவில்லை. எனவே வாயிற்காவலர்கள் அவர் உள்ளே நுழைய அவரை அனுமதிக்கவில்லை, திருமண உடையுடன் வருக என்றனர். அவர் தன் இல்லம் திரும்பினார். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு சென்றார்.

இப்போது அவர் வாழ்த்தி வரவேற்கப்பட்டார். விருந்து அளிக்கப்பட்டது. முதல் வரிசையில் அவர் பெயர் இடம் பெற்றிருந்தது. தன் ஆடைகளைக் கழற்றினார். மேசைமீது விரித்துப் போட்டார். அதில் விருந்தில் பரிமாறப்பட்ட உணவு ; வகைகளை எடுத்து வைத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பினார். திருமண வீட்டார் இந்நிகழ்ச்சி குறித்துக் கோபப்பட்டு "ஏன் இப்படி அறிவற்ற செயலைச் செய்தீர்?" எனக் கேட்டதற்கு அவர், "விருந்து எனக்கன்று, என் விலை உயர்ந்த ஆடைகளுக்கே. எனவே நான் எனக்கு அளிக்கப்பட்ட விருந்து உணவுப் பொருட்களை என் ஆடைகளுக்குக் கொடுத்துவிட்டேன்" என்றாராம். ஆம் இன்றைய சமுதாயம், "ஆள் பாதி ஆடை பாதி" என்றுதான் பார்க்கிறது. ஆலயம், பாடசாலை, சந்தை என்று எல்லா இடங்களிலும் ஆடை வேறுபாடு ஆள் கவர்ச்சி தென்படுகிறது. நல்லவேளை பாடசாலைகளில் சீருடை பின்பற்றப்படுகிறது. இயேசுவின் ஆடைகளையப்படும் போது தனது தரம் குறைக்கப்படுகிறது எனக் கருதி அதற்காகத் தம் கொள்கையிலிருந்து பின்வாங்கவில்லை. இன்று விளம்பர உலகத்தில் அதிகமாக இலாபம் ஈட்டும் துறை ஆடை வணிகம்தான்.

மனிதாபிமானம் என்ற மோகத்தில் கசியும் இரக்கம் இல்லாமலிருக்கலாமா? ஆடைக்குறையைக் கண்டால் எப்படியாவது அளித்து ஆனந்தம் அடைவோம். அதற்காகக் தூக்கி எறியவேண்டியவற்றைத் தூக்கிச் செல்ல வற்புறுத்த வேண்டாம். ஆடையில்லா மனிதர் அரைமனிதர்'.

**அகதிகளுக்குப் புகலிடம் அளித்தல்**

ஒரு நிகழ்வு : அது இரவு நேரம், மழை பெய்து கொண்டிருந்தது. அந்த வீட்டின் கதவு தட்டப்பட்டது. எண்பது வயதுடைய இல்லத் தலைவர் கதவைத் திறந்தார். வந்திருந்தவர்கள் இருவரும் இன்று இரவு உங்கள் வீட்டில் தங்க வேண்டும் இடம் தருவீர்களா?" என்றனர். தலைவர் எழுபத்தைந்து வயது நிரம்பிய தலைவியை நோக்கினார். அவரும் சம்மதம் தெரிவித்தார். அந்தச் சிறிய வீட்டில் வந்திருந்த தம்பதியர் தங்க வைக்கப்பட்டனர். விடியற்காலை நேரம், வந்திருந்தவர்கள் வீட்டிற்குப் புறப்படும் வேளை. வீட்டு உரிமையாளர்கள் விடை பெறக் கதவைத் திறந்தனர். அந்த முதிய தம்பதியர் இருவரும் நின்று கொண்டிருந்தனர், ஆளுக்கொருவர் தோளில் ஒவ்வொரு பேரக்குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தன. கண்ட வழிப் போக்கர்கள் கதறியழுதனர். வீட்டு உரிமையாளர்கள், "உங்களுக்குப் புகலி டம் கொடுத்ததில் உள்ளம் நிறைந்துவிட்டது' என்றனர். மனம் உண்டானால் மார்க்கம் உண்டல்லவா? இன்றைக்கு உலகில் 20 வீதத்திற்கு மேல் வீடு வசதி அற்றவர்கள் என புள்ளி விவரம் ஒன்று கூறுகிறது. உண்மையில் நாம் எல்லாரும் ஒரு விதத்தில் அகதிகளே. நம்மில் யாருக்கு? எங்கே? எப்போது? எப்படி? என்ன நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. பயணம் மேற்கொள்ளும் படகில் 'பரமன் விட்ட வழி' எனப் பயணிப்பவர் பலர். ஆனால் கடவுள் "இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்' (எசா 49:16), சீடர்களிடம், நரிகளுக்கு பதுங்கும் குழிகளும், வானத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு மானிட மகனுக்கோ தலைசாய்க்கக்கூட இடமில்லை " (மத் 8:20) என்றார். இறைமகனுக்கே இந்நிலை என்றால் நமக்கு எந்நிலை?

நாமும் தேவையில் இருப்பவர்களுக்குப் புகலிடம் கொடுப்போம். புகலிடம் பெறுபவர் புரியும் பிழைச் செயல்களால் வெறுத்துப் போய் பாதையை மாற்றிக் கொள்பவர் பலர். அவர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள்: நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை அனைத்தையும் அறிந்த கடவுள் (மகன்) நம்மோடு இருக்கிறார் (காண்க மத் 28:20), அவர் பார்த்துக் கொள்வார். கவலை நமக்கு வேண்டாம்.

**சிறையில் இருப்பவர்களைக் காணச் செல்லுதல்**

1981-ஆம் ஆண்டு மே 13-ஆம் நாள் உலகமே அதிர்ச்சியில் உறைந்த நாள். ஆம், அன்றுதான் முகமது அலி அகா திருத்தந்தை 2 ம் யோவான் பவுலைச் சுட்ட நாள். மனித நேயத்தின் மகத்துவத்திற்கு எடுத்துக்காட்டான திருத்தந்தை வெகு விரைவில் சிறைச்சாலைக்குச் சென்று தன்னைச் சுட்டவனைச் சந்தித்துப் பேசினாரே.. ஆம், இச்செயல் திருத்தந்தையை உலகின் எல்லாத் தரப்பினருக்கும் அறிமுகம் செய்தது.

சிறைகள் இன்று எத்தனையோ நல்லவர்களால் நிறைந்துள்ளன. இவையெல்லாவற்றுக்கும் தீர்வு இறை சந்திப்பு, சீரிய உரையாடல், குற்றப்பழி உணர்விலிருந்து விடுதலை, குற்றங்களை உணரச் செய்தல், குறைக்கச் செய்தல், விடுதலையை நோக்கிய செயற்பாட்டுக்கு வழிகாட்டல், இவை எல்லாமே இறைபணிகளே! சிந்திப்போம், செயற்படுவோம்.

**நோயாளரைச் சந்தித்தல்**

ஒருவர் நோயாளராய் இருப்பது அவர் செய்த பாவத்துக்குச் சம்பளமாகக் கருதப்பட்டது. அதனால்தான் இயேசு பலரைக் குணமாக்கிய பின் குருக்களிடம் போய் உன்னைக் காட்டு எனக் கூறுவதால் உணர்த்துகிறார். நோயாளர் ஒருவர் அதன் கடுமையை சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொள்வதால் அவர் புனிதராகும் வாய்ப்பு அதிகரிக்கிறது எனப் பலர் ஆற்றுப்படுத்துகின்றனர். நோய் கூட ஆன்மநோய் என்றும் உடல் நோய் என்றும் பகுக்கப்படுகிறது. ஆம். சிந்தனையில் புரையோடி அது செயலாகப் பரிணமித்து, செகத்தினை அழிப்பது ஆன்மநோயின் வெளிப்பாடு. வெறும் உடம்போடு ஒன்றித்து, உயிரோடு விளையாடி அதைச் செயலிழக்கச் செய்வது உடல் நோயின் கூறாகும். எனவே நோயாளரைச் சந்திப்பது.

1. அவரது நோயின் வலியைத் தாங்கிக் கொள்ள இறை வேண்டல் செய்வதற்கும்
2. நோய்க்கு மருத்துவ உதவி கிடைக்க வழிகளை ஆராயவும்,
3. நோயின் கடுமையில் அருகிருத்தல் ஆறுதலாக அமையவும்,
4. அது இறப்புக்கு இட்டுச் செல்லும் சூழல் ஏற்பட்டால் அதைச் சந்திக்க ஆற்றல் பெறவும் உதவுவதால் இது அவசியமா கிறது. எனவேதான் பல பக்திச் சபைகள் தங்களது செயல் திட்டங்களுள் ஒன்றாக நோயாளர் சந்திப்பைக் கருதுகின்றன.

**இறந்தவர்களை அடக்கம் செய்தல்**

பழைய ஏற்பாட்டின் இறுதி நூல்களான 1, 2 மக்கபேயர் நூல்களில் இறந்தோரை நல்லடக்கம் செய்வது பற்றி தெளிவாகக் காணக் கிடக்கிறது. இறப்பில் பெரிய சாவு, சிறிய சாவு என்றில்லை, எல்லாருடைய உடலையும் விட்டு ஆவி பிரிதலையே சாவு என்கிறோம். நல்ல சாவு, கெட்ட சாவு என விபத்தில் இறப்பது, இயற்கையாக இறப்பது பற்றி பலர் வகைப்படுத்துவர்.

எப்பேற்பட்ட மனித இறப்பாயினும் இறந்தவர்களை அடக்கம் செய்ய உதவுவதும் ஓர் அறச் செயலே!

ஆகவே, கிறிஸ்து பிறப்பு காலத்தில் துயருறுவோர், துன்புறுவோர், ஏழைகளின் துயர் துடைத்து, பிறர் அன்பு பணியூடாகக் குழந்தை இயேசுவைக் காண முயல்வோம்.

# காவலன் கலசம்

## அர்த்தமுள்ள ஆன்மீகம் 06

இரண்டு இதயங்களுக்கிடையே மலர்ந்த உறவு இன்னும் நெருங்கித் தழைக்கவேண்டு மாயின் இருவருக்கிடையிலும் ஒளிவு மறைவு என்பது இல்லாமலே போய்விடுதல் வேண்டும். கருத்துக்களும் உணர்ச்சிகளும் கனவுகளும் விருப்பங்களும் வேதனைகளும் பகிரப்படவேண் டும். இதயம் திறந்து பழகும் பழக்கம் இருவருக் கிடையே மட்டுமன்றி, எல்லாருடனும் என்ற அளவுக்கு விரிதல் நன்று. இறைவனோடு நாம் கொள்ளும் உறவிலும் இந்த உண்மை புலப்படு கிறது. இதயத்தைத் திறந்து வைத்தல், இறை உறவாடல் பற்றிச் சொன்னவுடன் பலர் இது நம்மால் முடியாது. துறவிகள் போன்றவர்கள்தான் இதில் ஈடுபட முடியும் என்று தவறுதலாக நினைக்கிறார்கள். ஒரு சிறிய உதாரணம் உண்மை நிலையை நமக்குத் தெளிவுபடுத்தும். தூய மரிய வியான்னி தனது ஆலயத்தில் செபிக் கும்போது வயது முதிர்ந்த ஒருவர் தினமும் அதே ஆலயத்துக்கு வந்து, முழந்தாழிட்டு, புத்தகம் எதுவுமில்லாமல் நீண்டநேரம் நற்கருணை ஆண்டவர்முன் செபித்துக்கொண்டே இருப்பார். இப்படி நாட்கள், வாரங்கள் பல நகர்ந்தன. புத்த கம் எதுவுமின்றி இவர் என்ன செய்கின்றார் என்ற வியப்பினால் ஒரு நாள் தூய மரிய வியான்னி அவரிடம் "பெரியவரே! நீங்கள் நீண்ட நேரம் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று

# இறை வேண்டல்



வேண்டல் என்பது வழிபாட் டின், செபத்தின் இன்றியமை யாத அம்சம் ஆகும். தி.பா 62:8. "அவர் முன்னிலையில் உங்கள் உள்ளத்தில் உள்ளதைத் திறந்து கொட்டுங்கள்." யோவேல் 2:13 இல் "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ளவேண்டாம். இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவ ரிடம் திரும்பி வாருங்கள்."

இறை வேண்டலைப் பற்றிப் பார்த்த நாம், இவ் இறை வேண்டல் மூலமாகவும் ஏற்படலாம் உறவாடல் மூலமாகவும் ஏற்படலாம். இவற்றில் எது முன் எது பின் என்றில்லை. ஒன்றோடு ஒன்று ஒன்றில் ஒன்று இணைந் துள்ளது.

**உரையாடல்:**

இரு நண்பர்கள் உரையாடுவதுபோல, இரு காதலர்கள் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதுபோல, தாயும் பிள்ளையும் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதுபோல உரை யாடுவது. அன்றாடம் அனுபவித்த அனுபவங் களை எவ்வித ஒளிவு மறைவுமின்றி வெளிப் படுத்துவது. அவை மகிழ்வான அனுபவங்களாய் இருக்கலாம். மனமுடைந்த அனுபவங்களாய் இருக்கலாம். ஒருவரால் அன்பு செய்யப்பட்ட அனுபவமாய் இருக்கலாம். இன்னொருவரால் உதாசீனம் செய்யப்பட்டு உள்ளம் உடைந்ததாய் இருக்கலாம். இன்பத்தையும் துன்பத்தையும் முழுமையாய் இறைவன் திருமுன் கொட்டுதல். நம் சொந்தத் தேவைகளுக்காக மட்டுமல்ல, தேவையில் உள்ளோர், குறிப்பாக ஏழைகளின் தேவைகளை இறைவன் முன் வைத்தல். இத்தகைய உரையாடலுக்குப் புத்தகம் எதுவும் தேவையில்லை. அதுமட்டுமன்றி இறைவன் கூறுபவற்றிற்கு உள்ளத்தால் செவிமடுத்தல். இறைவனுக்குச் செவிமடுத்தல் என்பது செபத்தின் ஒரு முக்கிய கூறு. இறைவனுக்குச் செவிமடுக் காமல் அது இறைவேண்டல் ஆகாது. இறைவ னுக்கு செவிமடுப்பதற்கு அமைந்த மனம் அல்லது மௌனம் அவசியம்.

இத்தகைய நிலையை இயேசுவின் வாழ்வில் மிகத் தெளிவாகக் காண்கின்றோம். இயேசு தம் தந்தையின் திருமுன் நின்று தம் உள்ளத்தையும் எண்ணங்களையும் ஏக் கங்களையும் மனச் சுமைகளையும் தயக்கங் களையும் அவரிடம் எடுத்துரைக்கின்றார். மக்க ளின், குறிப்பாக ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்களின் சுமைகளையும் சோகங்களையும் அன்றாட வாழ்வில் ஏற்றுக்கொண்டார் இயேசு. மத் 8:17 "அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்." மத் 11:28 "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங் களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." இறை வேண்டலில் அவர் அவற்றைத் தந்தைமுன் கொணர்ந்தார். அவற்றின் வழி தந்தை தமக் குச் சொல்லும் செய்தி, வெளிப்படுத்தும் திருவுளம் யாது என அவர் இறைவேண்டலில் கண்ட றிய முயன்றார்.

**உறவாடல்:**

இறைவேண்டல் உரையாடல் மட்டு மன்று. உயிரார்ந்த உறவாடலும் ஆகும். இறை

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

கேட்டார். அதற்கு அப் பெரியவர் "நான் ஆண்ட வரை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருக்கி றேன். அவர் என்னை அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்றார். ஆம், இதுதான் வார்த் தையைக் கடந்த உறவாடல். வார்த்தையைக் கடந்த மௌனம். இதைத்தான் "கண்ணும் கண் ணும் இணை நோக்கின் வாய்ச் சொல்லால் எப் பயனுமில்லை" என்றார் கம்பர் பெருந்தகை. இதை எல்லோருமே எளிதாகச் செய்யலாம் மிக எளிதாகச் செய்யலாம். நமது ஆலயங்களிலும் சில பாட்டிமார் நற்கருணையை உற்றுப் பார்த்துக் கொண்டே இருப்பதை நாம் காணலாம். இத்த கைய வார்த்தையைக் கடந்த உறவாடலை எமது மனித அனுபவத்திலே நாம் காணலாம். உற்ற நண்பர் இருவர் அல்லது காதலர் ஒருவருக்கு அருகே மற்றவர் எதுவுமே பேசாது நீண்ட நேரம் அமர்ந்திருப்பர். இங்கே ஒருவருடைய இதயத் துடிப்பை மற்றவர் தன் இதயத்தில் உணர்ந்து கொண்டு இருப்பர். இப்படிப்பட்ட தந்தையுடனான உறவாடலைஇயேசுவின்வாழ்வில்துல்லியமாகக் காணலாம். இயேசு தந்தையின் உடனிருப்பை உணர்ந்தார் அவரது அன்புறவிலும் ஆவி யிலும் ஊன்றித் திளைத்தார். தந்தையே தம் இயல்பிற்கும் இருப்பிற்கும் ஊற்று தம் வாழ்வுக்கும் பணிகளுக்கும் உந்து சக்தி எனத் தம் முழுமை யான சார்பு நிலையை இறை வேண்டலில் அவர் உய்த்துணர்ந்தார் அந்தத் தந்தையுடன் தம் உள்ளத்தாலும் உணர்வாலும் இருப்பாலும் ஈடுபாட்டாலும் ஒன்றிக்கிறார். அனைத்திற்கும் மேலாக இறைவன் தம் தந்தை. தாம் அவரு டைய அன்பு மகன் என்னும் அனுபவமாக இந்த உறவாடல் இயேசுவுக்கு அமைகிறது. இதனால் தந்தையின் ஆளுமையும் இயேசுவின் ஆளுமை யும் ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தது. தந்தையின் உணர்வுகள், பண்புகள், பார்வை கள், ஆற்றல்கள் எல்லாம் இயேசுவின் உணர்வு களாக, பண்புகளாக, பார்வைகளாக, ஆற்றல்க ளாக மாறின. தந்தைக்கும் மகனுக்கும் இடையே இருந்த உறவு வார்த்தைக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது. இறைவனுடைய திட்டம் அவரது திட்ட மாக, இறைவனின் ஆளுமை இயேசுவின் ஆளுமையாக மாறின.

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

09

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 4



**பழைய வாழ்க்கை முறையையும் புதிய ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்**

**4.3 இந்து ஆலயங்களுக்கும் கிறிஸ்தவர்களின் ஆலயங்களுக்கும் வேற்றுமையான பண்புகள்**

யூத மனிதனாகப் பிறந்து வளர்ந்த இறைமகன் இயேசுவின் போதனையும் சாதனையும் ஓர் புரட்சிகரமான மதத்தையும் ஆலயங்க ளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு வந்தது. கிறிஸ்தவர்கள் இறைவனின் பிரசன்னத்தை ஓர் கட்டிடத்திற்குள் அடக்கியவர்களல்ல. இஸ்ரவேலரைப் போல் ஜெருசலேம் ஆலயத்தில் மையப்படுத்தியவர் களல்ல.

கிறிஸ்துவின் சீடர்கள் தாங்கள் கூடுமிடத்தையே வசதிக் கேற்றவாறு தீர்மானித்தனர். அங்கே இறை வார்த்தையைக் கேட்டு உள்வாங்கவும், கிறிஸ்து மனித மீட்பிற்காக ஒப்புக்கொடுத்த பலிவிருந்தை நினைவு கூர்ந்து பங்கேற்கவும், ஒரு சகோதர குழுமமாகக் குருவுடன் கூடுவர், கொண்டாடுவர். இவ் விடங்கள் கிறிஸ்தவர்களின் அழைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதன் முறையாக புனித சின்னப்பர் பர்ணபாஸ் இவர்கள் நடாத்திய குழுவினரே - கிறிஸ்தவர்கள் - என்ற நாமத்தைப் பெற்றனர். அவர்கள் கூடுமிடம் நிரந்தர தன்மை பெற்றது. இதன் காரணமாக, கூடுகிறவர்கள் சீடர்கள், அல்லது கிறிஸ்தவர்கள் என்றும், அவர்கள் கூடுமிடம் - குழுமத்தின் பெயரையே எடுத்தது. உதாரணமாக - அந்தி யோக்க திரு அவைக்கூடகம் என்று அழைக்கப்படுகின்றது.

இதற்கிணங்க, திரு அவைகள் கூடுமிடத்தையும், முக்கிய ஐரோப்பிய மொழிகளில் திருஅவை என்றே அழைத்தனர். உதாரண- மாக - The Church, l'Eglise, la Chiesa, die Kirche… ஆனால் தமிழ்க் கிறிஸ்தவர்கள் தாங்கள் கூடுமிடத்தை, திருஅவை கூடகம் என்று அழைக்காது, இந்து - சைவ சகோதரர் போல் கோவில் அல்லது ஆலயம் என்றே அழைத்தனர்.

கிறிஸ்தவ அவைகள் அமைப்புகளாக வளர்ச்சி அடைந் பின், பல அவைகளுக்குப் பொறுப்பாக ஒரு பிரதம குருவே ஆயர் என்ற பெய ரில், தனது மறைமாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் கூடுமிடம் எல்லா வற்றிற்கும் தலைவரானார். பங்கு தந்தை, பூசாரியைப் போல் அல்லாது, அவ்விடத்தில் ஆயரின் பிரதிநிதியாக அங்கே வாழும் கிறிஸ்தவர் குழு மத்தின் வழிகாட்டியாகவும், ஆலய வழிபாடுகளின் தலைவராகவும் பணிபுரிவார்.

கிறிஸ்தவ ஆலயம் அல்லது கோவிலைப் பற்றி, இந்து - சைவ கண்ணோட்டம் நிலவுவதால், சாதிப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை, வழிபாட்டில் பங்கு பற்றி வாசகங்கள் விசுவாசி மன்றாட்டுகள் சொல்வதற் கான உரிமை மறுக்கப்படுவது. இப்படியான பிரச்சினைகள் எழுகின்றன.

ஆகையினால் நாங்கள் கூடுமிடங்களை புதிய பெயர் கொண்டு மாற்றாது, புரிந்து கொள்ளுதல் ஆவது, கிறிஸ்தவ கோவில் ஆலயங்க ளையும், ஆயர், பங்குக் குரு, கிறிஸ்தவர்களின் உரிமைகளை சரியாக புரிந்து நடப்பதே சிறந்தது.

**4.4 தமிழ்க் கிறிஸ்தவர்கள் பழைய முறைகளை மாற்றாது சமாளிக்கும் பண்பையே விரும்புகின்றனர்.**

தமிழர் ஆதியிலிருந்து வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை வாழ்க்கைக்குத் தேவையான சகலத்தையும் மார்கா (margha) இந்து - சைவத்தில் கொண்டிருந்தது. இதிலிருந்து மதம் என்று ஒரு பகுதியைத் தமிழர் பிரிக்கவில்லை. ஆனால் கிறிஸ்தவத்தின் தன்மையும் வரு கையும், தமிழர்கள் தமிழராக இருந்து கொண்டு, இந்நோர் மதத்தைப் பின்பற்றலாம் என்ற நிலைமையை தோற்றுவித்தது.

தமிழ் மக்களின் பரந்த மதத் தன்மை (Tamil Religiosity) காரணமாக, இனப்பற்று மொழிப்பற்று கலாச்சாரப் பற்று, அத்துடன் புதிய மதத் தேவையையும், சமாளிக்கும் தன்மை ஆகும்! (ability to compromise old ways with new demands).

தமிழ் இந்துக்கள், தமிழ் இஸ்லாமிய சகோதரர் போல் அல்லாது, ஒரே கணவன் ஒரே மனைவி உறவுகளைக் கொண்டவர்க ளாக இருந்தனர். ஆகையினால் தமிழ்க் கிறிஸ்தவர்களும் குடும்ப உறவி லும், நாளாந்த குடும்பச் சமூக வாழ்விலும், தமிழ் ஒழுக்க முறை- களைத் தொடர்ந்தனர்.

தமிழ்மொழி இலக்கியம், சங்கீதம் பரத நாட்டியம் போன்ற நல்ல அம்சங்களுடன், பல மூடநம்பிக்கைகளும் கலந்திருந்தாலும், பழக்க வழக்கங்களுக்குத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் குடும்ப சமூக நிகழ்வு களில் முன்போல முக்கியத்துவம் கொடுத்தனர்.

தமிழர், இந்து - சைவர்களாக சமூக வாழ்வில், மனிதரை சமத்துவ உரிமையுடைய சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளாதது போல, மதம் மாறிய தமிழ்க் கிறிஸ்தவர்களும் சாதி வேறுபாடுகளை, நுணுக்க மாக மிக ஆர்வத்துடனும், ஆவேசத்துடனும், குடும்பத்திலும் சமூகத்தி லும் கடைப்பிடித்தனர். *(தொடரும்....)*

'நவாலியூர் நாயகி' என்ற புனைபெயருடன் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக பாதுகாவலன் பத்திரிகையில் பல்வேறு கவிதைகளையும் ஆக்கங்களையும் எழுதி வந்த வரும், ஈழத்தின் புகழ்பூத்த பெண் கவிஞரும், நாட்டுப் பற்றாளரும், பாடகியும், ஓய்வு நிலை ஆசிரியரும், அதிபருமாகிய திருமதி மேரிநாயகி மரியதாஸ் அவர்கள் 22.10.2021 அன்று தனது 81ஆவது வயதில் இறையடி சேர்ந்தார். பாதுகாவலனின் நீண்டகாலப் படைப்பாளி யாகிய அவருக்கு பாதுகாவலன் பத்திரிகை தனது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் இன்றைய கலைக்காவலன் அவர் பற்றிய இக்கட்டுரையை பிரசுரிப்பதில் நிறைவடைகின்றது.

# நவாலியூரின் கவிக்குரல் நாயகி கடவுளுள் கலந்தார்

### கலைப்பின்னணி

நவாலியூர் நாயகி அவர்கள் 22.08.1940 அன்று நவாலியில் பாரம்பரியமான கலைக் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தையார் அந்தோனிப்பிள்ளை சிறந்த நாட்டுக் கூத்துக்கலைஞர், இசை,நடனக் கலைஞராகிய தொம் மைக்குட்டி மாஸ்டர். இவரது சகோதரன். அதனால் பாலப்பருவத்தில் இருந்தே படைப்பாற்றல் மிக்கவராகத் திகழ்ந்து வந்தார். இனிமையான குரல் வளம் மிக்கவரான இவரும் சிறிய வயதில் இருந்தே பாடல்களைப் பாடவல்லவராக வும், எழுத்தாற்றல் மிக்கவராகவும் விளங்கினார். நவாலிப் பங்கில் பாடகர் குழாமில் நீண்ட காலம் பாடகியாக இருந் தார். மானிப்பாய் புனித ஆனாள் வித்தி யாலயத்திலும், சுண்டுக்குளி மகளிர் கல் லூரியிலும் கல்வி பயின்ற இவர், ஆசிரிய நியமனம் பெற்று, பல மாவட்டங்களிலும் சேவையாற்றினார். கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அருட் பணி தியோகுப்பிள்ளை அவர்கள் (முன் னாள் ஆயர்) அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியராகப் பயிற்சிபெற்றார்.அருட்திரு தியோகுப்பிள்ளை அவர்களும் இவரது எழுத்தாற்றலைக் கண்டு ஊக்குவித்தார். குருநாகல், பதுளை, மூதூர்,பண்டிவிரிச் சான் போன்ற பிற மாவட்டங்களில் ஆசி ரியராகப் பணியாற்றியதுடன், இறுதியாக யாழ்ப்பாணம் புனித யோண்பொஸ்கோ வித்தியாலயம், நவாலி சென் பீற்றஸ் வித் தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் ஆசிரியராகவும், சென்பீற்றர்ஸ் பாடசாலை யின், அதிபராகவும் கடமையாற்றி ஒய்வுபெற்றார்.

### 'பாதுகாவலன்' எழுத்தாளர்

1954 ஆம் ஆண்டு 14 வயதில் முதன் முதலாக இவர் 'நான் தாயல்ல பேய்' என்ற சிறுகதையை பாதுகாவலன் பத்திரிகையில் எழுதியதில் இருந்து இவ ரது எழுத்துத்துறை ஆரம்பமாகியது. பாது காவலன் பத்திரிகையின் கிறிஸ்மஸ் சிறப் பிதழ்களிலும் ஈஸ்டர் சிறப்பிதழ்களிலும் முன் பக்கத்தில் அவரது கவிதை வராத சிறப்பிதழ்கள் இல்லை என்ற அளவில் ஏறத்தாழ 300 க்கும் மேற்பட்ட கவிதை-களை பாதுகாவலனுக்கு அவர் எழுதியுள் ளார். அதுமட்டுமன்றி ஆயர்களை வாழ்த் தியும், விசேட திருநாட்களிலும், நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளிலும் அர்த்த முள்ள பல கவிதைகளை அவர் தொடர்ச்சி யாக எழுதியுள்ளார். அது மட்டுமன்றி பல சிறுகதைகளையும், சில கட்டுரைக ளையும் எழுதியுள்ளார். பத்திரிகையின் எழுத்தாளராக மட்டுமன்றி அதன் வளர்ச் சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட வாசகியாகவும் திகழ்ந்தார்.

### திரு இசைப் பாடகி

ஆலய பாடகர் குழாமில் நீண்ட காலம் பாடல்களைப் பாடியது மட்டுமன்றி பல இசை நாடாக்களிலும், இறுவெட்டுக்க ளிலும் பல கிறிஸ்தவப் பாடல்களைப் பாடி யுள்ளார். அதுமட்டுமன்றி ஆலயவழிபாட் டில் பயன்படுத்தவல்ல பல பாடல்களை யும் இயற்றியுள்ளார். குறிப்பாக 1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வின் பின் அவர் எழுதிய *" கண்ணீர் சிந்துகின்றோம் கொஞ்சம் கருணை காட்டுமையா.."* என்ற மன்னிப்பு பஜனைப் பாடல் இலங் கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதி யாகவும் பிரபல்யம் பெற்றது. அதுமட்டு மன்றி நவாலியின் புனித பேதுரு பாவுலு ஆலயத்துக்குரிய புனிதர் பாடலையும் இவரே எழுதி இசையமைத்தார். இன்றும் புனிதர்களின் திருச்சுரூபம் தூக்கும் போது அப்பாடல் மிகவும் உருக்கத்துடன் அங்கு பாடப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம், ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகைகளின் ஆயத்துவ அபிசேக விழாக்களிலும், பல விசேட விழாக்களிலும் இவரே வாழ்த்துப்பாக்களை இயற்றிப்பாடினார். இறைவன் தனக்குத் தந்த கவியாற்றல் என்ற தாலந்தினை எந்தளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்குப் பயன்படுத்தியுள்ளார். கவிதைகள், நினைவுக் கல்வெட்டுக்கள், வழ்த்துப்பாக் கள், என எழுதித் தரும்படி கேட்டு வரு பவர்களை, உடன் இருத்தி, அவர்கள் முன்பாகவே பாடலை இயற்றி வழங்கி வழியனுப்பி வைக்கும், பண்பும் கவி யாற்றலும் அவரிடம் இருந்தது.



### பாடசாலைகளில் கலைப்பணி

தனது கற்பித்தல் திறனால் சிறந்த ஆசிரியராகப் பாடசாலைகளில் கடமை யாற்றிப் பல கல்வி அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்ற இவர், கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதானங்களிலும் கூடிய அக்கறை காட்டிச் செயற்பட்டார். நாடகம், கவியரங்குப் பட்டிமன்றம், குழுப்பாடல், தனிநடிப்பு.. என்று பலவற்றையும் எழுதி மாணவர்களுக்குப் பயிற்றுவித்து ஊக்கப்படுத்தி வந்துள்ளார். பல போட்டிகளில் மாணவர்கள் தேசிய நிலை யில் முதலிடம் பெறுவதற்கு

**காவலூர் யோவான்**

அவரது ஆக்கங்கள் உதவியுள்ளன. பதுளை மகாவித்தியாலய மாணவர்களுக்கு இவர் எழுதிப் பழக்கிய நாடகம் தேசியமட்டத்தில் முதலி டம் பெற்றது. அவ்வாறே, பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் புனித யோண் பொஸ்கோ பாடசாலைகளில் கற்பிக்கும் காலத்தில் இவர் எழுதி நெறிப் படுத்திய நாடகங்கள் பல போட்டிகளில் தேசியமட்டத்தில் முதலிடம் பெற் றுப் பாடசாலைகளுக்குப் பெருமை தேடிக் கொடுத்தன.

மாணவர்களுக்கு என இவர் எழுதி இசையமைத்துப் பாடிய பாடல்களும் பல ராலும் இன்றும் பாடப்படுவது குறிப்பிடத் தக்கது. எடுத்துக்காட்டாக "சின்ன சின்ன குருவிகள் சிறுவர் சிறுமி குருவிகள் வண்ண வண்ண சட்டை போடும் வாயாடிக் குருவிகள்." ஏன்ற புகழ் பெற்ற பாடலைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி நவாலி சென் பீற்றஸ் பாடசாலை, மானிப் பாய் சென் ஆன்ஸ் பாடசாலைகளின் பாடசாலை கீதங்களும் இவராலேயே இயற்றப்பட்டன. அதுமட்டுமன்றி லண்ட னில் உள்ள 'அகில உலக தமிழ் விளை யாட்டுப் பாசாலையின்' கீதம் முதலாக இவரால் எழுதப்பட்டது.

### திருமறைக் கலாமன்றத்தில்..

திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்ப கால உறுப்பினராகிய இவர், மரியசேவி யர் அடிகளின் கலைச் செயற்பாடுகளுக்கு தொடக்க காலத்தில் பேருதவியாக இருந் தார். இத்தாலிய திரைப்படம் ஒன்றினை அவர் மொழிமாற்றம் செய்தபோது அத் திரைப்படத்தின் கதாநாயகிக்கு இவரே குரல் வழங்கினார். சில திருப் பாடுகளின் நாடகங்களுக்குப் பாடல்களைப் பாடியது மட்டுமன்றி மரியசேவியர் அடிகள் இலங்கை வானொலி யின் கத்தோலிக்க சேவைக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில். இலங்கை வானொலிக்கான பாடல்கள் பலவற்றை எழுதியுள் ளார். அவர் தயாரித்த வானொலி நாட கங்களுக்கும் குரல் வழங்கியுள்ளார். 'தாயகம் தான் நம் தாய் வீடு..' போன்ற அவரது பாடல்கள் திருமறைக் கலாமன்ற இறுவட்டுகளில் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிற்பட்ட காலத்தில் அவர் முழுமையாக பங்களிப்புவழங்க முடியாத சூழல் இருந்தாலும் மன்றத்தின் அபிமானியாக செயற்பட்டார். கருத்தரங்கு கள் சிலவற்றிலும், போட்டிகள் போன்றவற்றுக்கு நடுவராகவும் வள வாளராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

### தேசிய உணர்வுள்ளவராக..

இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில் மக்களின் அவ லங்களை வெளிப்படுத்த வல்ல பல பாடல் களையும் எழுதியது மட்டுமன்றி இளை ஞர்களின் தியாகங்களையும் அர்ப்பணிப் பபையும் வெளிப்படுத்தும் பல பாடல் களையும் இயற்றிப் பாடியுள்ளார்.

*"இரத்தத்திலே சிவந்த மண்ணே முத்தம் கொடுத்தேன் வா.."*
*" கொடிகள் பறக்குதடா கோட்டை வாசலிலே.."*

போன்ற அவரின் பிரபல்யமான சில பாடல் களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

### கவிதைகளின் சிறப்பு

நவாலியூர் நாயகி அவர்கள் கிறிஸ் தவ பெண் கவிஞர் என்று அடையாளப் படுத்தப் படக்கூடியவராகத் தனது வாழ்வா லும் படைப்புக்களாலும் உயர்ந்து நிற் கின்றார். வெறுமனே கவிதை எழுது பவராக மட்டுமன்றி சமகால வாழ் நிலை களில் கிழம்பும் தனது உணர்வலை களை வெளிப்படுத்தவல்ல படைப்பாளி யாகவும் கிறிஸ்தவ மதிப்பீடுகளுடன் வாழ்ந்த கவிஞராகவும் திகழ்ந்துள்ளார். இவர் எழுதிய முதல் சிறுகதையே அவர் தான் வாழ்ந்த பிரதேசத்தில் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்ற தாய் ஒருவர் ஒரு குழந்தை அழகாக இருந்தமைக்காக அதனை சீராட்டியும் மற்றயதை கவனிக் காமலும் விட்டதுமான அவலத்தை பார்த்த தன் விளைவாகவே கோபத்துடன் "நான் தாயல்ல பேய்' என்ற பெயரில் அச் சம்பவத் தினை சிறுகதையாக அவரால் எழுதப் பட்டது சமூகத்தினை ஆழமாக நோக்கும் அனுதாப பார்வையும், தீமைகளைச் சாடும் அறச் சீற்றமும், ஏழைகள் ஒடுக்கப்படுவோர் மேல் கொள்ளும் அனுதாப அலையும், இயலாமைகளில் இறைவனிடம் முறையிடும் ஆற்றாமை யும் அவரது கவிதைகளில் என்றும் இருக்கும். அதற்கு உதாரணமாக ஒரு சில கவிதை வரிகளை நோக்கும்போது, கொழும்பு பல்கலைக் கழகத்தில் வரப்பிர காஷ் என்ற பல்கலைக்கழக மாணவன் ராக்கிங்கினால் உயிர் துறந்த அவலத்தினை தாங்க முடியாது அவர் எழுதிய "எந்தத் தாய் தாங்குவாள்.." என்ற கவிதையை உதயன் பத்திரிகை அன்று பிரசுரித்திருந்தது.

*"பகிடிவதைக்கு சாவுமணியடியுங்கள்*
*பல்கலைக்கழகங்கள் இன்னுமேன் தாமதம்*
*பகிடியோ வாழ்க்கை பகிடியோ*
*மனித உயிர்.."*

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்துகொண்டிருந்த போது அவர் எழுதிய கவிதையில் அன்றைய காலத்தின் துயரத்தின் வரிகள் பலரையும் கவலைக்குள்ளாக்கின.

*"மன்னா பொழிபுமோ வன்னிமக்கள் மேல்*
*மாதவனே யேசய்யா சொல்லுமப்பா*
*மன்றாடும் அவர்களின் கூக்குரல்கள்*
*நின்றாடும் பேருக்குள் கேட்கவில்லை*
*திண்டாடும் மக்களை திரும்பிப்பார்க்க*
*எவருக்கும் துணிவில்லை சாகிறாரே "*

யுத்தம் முடிந்ததன் பின்னர் பாது காவலனுக்கு அவர் எழுதிய கிறிஸ்மஸ் கவிதை, பாலக யேசுவிடம் நிலையை சொல்லி உதவ வேண்டாமென்று புலம்பும் பாடலாக அமைந்திருந்தது. அப்புலம்பலுக் குள் ஈழத்தமிழ் மக்களின் பேரவலம் உட்பொதிந்துள்ளது.

*"வீழுழந்து நாடிழந்து முட்கம்பி வேலிக்குள்*
*வாடி நிற்கும் உறவுகளை*
*மீளக்குடியமர்த்தும்.*
*செய்யாத தவறுக்காய் சிறையிலே வாடுவோரை*
*ஐயா நீ சென்று அழைத்துவர வேண்டும்."*

அவ்வாறே பாப்பரசர் மடுவுக்கு வந்தபோது அவரை வாழ்த்திப் பாடிய கவிதையிலும் நாட்டின் நிலையைச் சொல்லி வாழ்த்திப் பாடுகின்றார்.

*"பேரின் பிடிக்குள்ளே சிக்கிய வன்னி மக்கள்*
*யாரின் துணை எமக்கு இனி என்று தவிக்கையிலே*
*'நான் வருவேன் இலங்கைக்கு' என்று சொன்ன*
*வாக்கின்படி*
*வந்தவரே நல்லவரே வருக வருக தந்தாய்.."*

1995 ஆம் ஆண்டு இடப்பெயர் வின் பின் இங்கு மீண்ட மக்கள் பட்டு அனுபவித்த துயரங்கள் மறந்து மீண்டும், எல்லைச் சண்டைகள், சாதி சண்டைகள் என்று சமூகம் மாறியபோது தான் தனது ஆற்றாமையோடு பின்வரும் மன்னிப்பு பஜனையைப் பாடினார்.

*"கண்ணீர் சிந்துகின்றோம் கொஞ்சம் கருணை*
*காட்டுமையா*
*கணங்கள் செய்த பாவத்திற்காய் கண்ணீர்*
*சிந்துகின்றோம் -எங்கள்*
*கால்கள் செய்த பாவத்திற்காய் தூர நடக்கின்றோம்*
*கைகள் செய்த பாவத்திற்காய் கையேந்தி*
*நிற்கின்றோம்.."*

யுத்தத்திற்கு பின்னர் நாட்டில் நிலவிய சமூக அடாவடித்தனங்களைப் பெறுக்காத அவர் கிறிஸ்மஸ் கவிதையில் பின்வருமாறு எழுதினார்

"பெற்ற பிள்ளையைக் கொல்லுகின்ற
தாய்மார்கள்
பாலூட்டும் அன்னையைக் கெடுக்கின்ற
பாதகர்கள்
பணத்துக்காய் பலரைக் கடத்துகின்ற கும்பல்கள்
இவையெல்லாம்
இங்கிருக்க எங்குவந்து பிறப்பாய் நீ"

எனவே பாரதி கூறிய 'நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்' மிக்க ஈழத் தின் பெண் கவிஞராய் படைப்பாளியாய், பாடகியாய் பல்லாயிரக்கணக்கான பணி-களை ஆற்றினாலும் தன்னடக்கத்துடன் எல்லாப்புகழும் இறைவனுக்கே என்று ஆர்ப்பாட்டமில்லாது வாழ்ந்து இறை சந்நி தானம் சென்றிருக்கும் நவாலியூர் நாயகி ஒரு கிறிஸ்தவ கலைஞன் எப்படி இருக்க

# கூட்டொருங்கியக்கமும் – பிரபஞ்சமும்

### அறிமுகம்

எமது அன்பிற்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இப்பிரபஞ்சத்தின் ஒரு சிறு துளியாகவும், பிர பஞ்சத்தின் அருள் அடையாளமாகவும் திகழும் திரு அவை யானது புளிக்காரமாக செயற்பட்டு பிரபஞ்சத்தை அரவ ணைத்து பரலோக தந்தையை நோக்கிய பயணத்தில் அனைவரையும் அனைத்தையும், இணைத்துக் கொள்ள எமக்கு ஒரு சிறப்பான அழைப்பை விடுத்திருக்கிறார். கூட் டொருங்கியக்கம்என்பது மனிதர்கள், படைப்புகள் அனைத் தும் ஒருங்கிணைந்து பயணிப்பதைக் குறிக்கின்றது. இந்நாட்களில் பாதுகாவலன் வாசகர்களாகிய நாம் கூட்டொருங் கியத்தின் பல்வேறு பரிமாணங்களை வெவ்வேறு கோணங்களில் சிந்தித்து வருகின்றோம். இக்கட்டுரை யானது கூட்டொருங்கியக்கமும் பிரபஞ்சமும் என்ற தலைப்பில் திருஅவை பிரபஞ்சத்தை எவ்வாறு தனது பயணத்தில் இணைத்துப் பயணிக்கலாம் என்பது பற்றி ஆய்கின்றது.

### பூமியின் குமுறலும், ஏழையின் குமுறலும்

“இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம்” (2 உரோ 8:22)

இன்று பிரபஞ்ச படைப்பின் ஒரு பகுதியாகிய ஏழைகளும் உள்ளக் குமுறலுடன், ஏக்கத்துடன் பயணிக் கின்றார்கள். பிரபஞ்சமானது மனிதனின் பின் விளை வறியா, சுயநலச் செயற்பாடுகள் காரணமாக குமுறிக் கொண்டு இருக்கின்றது. இக்குமுறலானது பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். சுனாமியாக, எரிமலையாக, நிலச்சரிவாக இன்னும் பல் வேறு அழிவுகளாகப் பீறிட்டெழுவதை அவதானிக்க லாம். இவ் அவல நிலையை திருஅவை இனம்காண அழைப்பு விடுக்கின்றது.

அதேவேளை மனித குலத்தின் நலிவுற்ற நிலை யில் உயிர்வாழும் ஏழைகளும், உள்ளக் குமுறலுடன் வாழ்கின்றார்கள். பொருளாதார முதலைகளின் பேராசை கள் சமூகமட்டத்தில் நலிவுற்றவர்களின் தொகையை நாளுக்கு நாள் பெருக்கிக் கொண்டிருப்பதை நாம் காண லாம். உலகில் ஏழைகளின் தொகை கொரோனாவின் காரணமாக இரட்டிப்படைந்திருக்கின்றது. இவர்களின் குமுறலைச் செவிமடுக்க திருத்தந்தை அழைப்பு விடுக் கின்றார்.

### பிரபஞ்சம்

“உடல் ஒன்றே: உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல் கிறிஸ்துவும் இருக்கிறார். (1 கொரி 12:12)

பிரபஞ்சம் என்பது இறை தந்தையின் கை வேலைப்பாடாகும். இப் பிரபஞ்சத்தில் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளது. இவ்விணைப்புச் சங்கிலியானது இயங்கு நிலையில் காணப்படுகின்றது. இவ்விணைப்பில் திருஅவை ஒரு சிறு துளியாக அமை- கிறது. எனவே இப்பிரபஞ்சத்தினை இணைப்பில் ஒரு பகுதி பாதிப்பிற்குள்ளாகும்போது ஏனைய பகுதிகளும் பாதிப்பிற்குள்ளாகி சமநிலை ஆட்டம் காணுகிறது. ஒரு மனித உடலில் ஒரு பகுதி நோய்வாய்ப்படுகையில் ஏனைய பகுதிகளும் பாதிக்கப்படுவதுபோல் பிரபஞ்சமும் பாதிப்பிற்கு உள்ளாகின்றது. (காண் 1 கொரி. 12 : 12-31)




### பிரபஞ்ச சமநிலை தாக்கப்படும் நிலைகள்

1. அதிகரித்த வெப்பம் காரணமாகத் துருவ பனிப்பாறைகள் உருக ஆரம்பிக்கின்றன,
2. கடல் நீர் மட்டம் அதிகரிக்கின்றது,
3. கடலரிப்புக் காரணமாக தீவு நாடுகள் பாதிக்கப் படுகின்றன,
4. கடற்தொழில் பாதிப்படைகின்றது,
5. கடற்கரையில் வாழும் மக்கள் இடப்பெயர்வை சந்திக்கின்றனர்,
6. காடழிப்பு வேகமாக மேற்கொள்ளப்படுகின்றது,
7. மழைவீழ்ச்சி குறைவடைகின்றது,
8. அரியவகை உயிரினங்கள் வேட்டையாடப்படுகின்றது,
9. பூமியின் கீழ் அகழப்படும் நிலக்கரி பூமியின் சமநிலை- யைச் சீர்குலைக்கிறது,
10. ஏனையவை.

### இலங்கைத்தீவு

எமது நாடு ஒரு தீவு நாடாகும். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள பிரபஞ்ச சமநிலையின்’ தாக்க மானது நேரடியாகவும் உடனடியாகவும் எமக்குத் தாக் கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மேற்கூறிய பாதிப்புக்களின் கனாகனம் எமக்கு அதிகமாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. எனவே இலங் கைத் திரு அவையானது இப்பிரபஞ்சத்தின் மட்டிலான அக்கறையை அதிகரிக்க வேண்டிய தேவை யானது உணரப்படுகின்றது.

இலங்கைத் தீவின் திருஅவையாக நாம் ஒருங் கிணைந்து செயற்பட முயற்சி எடுக்கவேண்டும். இக் கூட் டொருங்கியக்க ஆயர்கள் மாமன்றமானது எமது பாகுபாடு களைக் களைந்து ஒன்றித்து பிரபஞ்சத்தின் இயக்கத்தைப் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டும்.

### யாழ். திருஅவை

யாழ் திருஅவையானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மூன்று மாவட்டங்களையும் உள் ளடக்கியுள்ளது. எனவே எமது புவியியல்சார் மாறுபாடு கள் எமது திருஅவையை இலகுவாகப் பாதிக்கக்கூடிய தாக இருக்கின்றது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி யானது எமது மறைமாவட்ட திருஅவையைப் பெரிதும் பாதித்திருந்தது. பல உயிர்களும்உடமைகளும் காவு கொள்ளப்பட்டன.

கடல் சூழ் பகுதியில் நாம் வாழுகின்றோம். கடல் நீரானது உயர்வடைகின்ற போது எமது மறைமாவட்டத் தின் எல்லைகள் பாதிப்பிற்குள்ளாகும். பலர் தமது சொந்த இடங்களை, வீடுகளை இழக்கக்கூடிய நிலை உருவாகும். கடலரிப்பு பல பாதிப்புக்களை எமது திரு அவைக்கு ஏற் படுத்தக் கூடும். காடழிப்பும் எமது மறைமாவட்ட திரு அவையை பாதிப்பிற்குள்ளாக்கும். மழைவீழ்ச்சி குறை வடைகின்றபோது எமது வாழ்வாதாரமான விவசாயம் பாதிப்பிற்குள்ளாகும். நன்னீர் தேவை அதிகரிக்கும். சாதாரண கோடைகாலங்களில் தீவுப்பகுதிகள், கிளி நொச்சி, பூநகரி போன்ற எமது பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இருப்பது கண்கூடு.

எரிவாயுத் தட்டுப்பாடானது இன்று புதிய சவாலாக எமது மக்களைப் பாதித்துள்ளது. மரங்கள் வெட்டப்பட்டு பல தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமை காரண- மாக விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே அடுப்புக் களை இயக்குவதற்கு விறகுகள் இல்லை. எனவே உணவைத் தயாரிப்பதற்கு மக்கள் பல அசௌகரியங் களை எதிர்நோக்குகின்றார்கள்.

### எமது கூட்டொருங்கியக்கத் திருஅவை

எனவே மேற்கூறப்பட்ட பிரபஞ்சம் சார்பான நிலைப்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து சீராகப் பயணம் செய்ய நாம் பரந்துபட்ட மனப்பான்மையுடன் செயற்பட அழைக்கப்படுகின்றோம். இதற்கான ஒரு சிறப் பான வாய்ப்பு கூட்டொருங்கியக்கத் திருஅவையாக நாம் பயணம் செய்வதில் அடங்கியுள்ளது. இயற்கையோடும், சக மனிதர்களோடும், உயிர் வாழ்வனவோடும் இணைந்து நாம் செயற்பட வேண்டும். இதன் வழியாக நாம் பிரபஞ் சத்தைப் பாதுகாக்கலாம். பிரபஞ்சமானது பாதுகாக்கப்படும் பொழுது நாம் பாதுகாக்கப்படுகின்றோம்.

கூட்டொருங்கியக்கத்தின் தூண்களான ஒன் றிப்பு, பங்களிப்பு, மறைப்பணி போன்றவற்றை நாம் சீராகத் தியானித்து பிரபஞ்சத்தை எமது பயணத்தில் இணைத்துக் கொள்வோம்.

### இறுதியாக

கூட்டொருங்கியக்க ஆயர்கள் மாமன்றத்தின் ஆயத்த காலமாகிய இந்நாட்களில் நாம் இதன் ஒரு பகுதியாகிய பிரபஞ்சத்தின் மட்டிலான எமது மறைப் பணியைப் பற்றி நாம் சிந்திப்பது சாலவும் சிறந்ததாகும். பிரபஞ்சத்தை நாம் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் ஒவ்வொருவரும் இப்பிரபஞ்சத்தின் ஒரு சிறு கோளான பூமியில் வாடகைக்குக் குடியிருக்கின்றோம். எமது வாடகைக் காலம் முடிவுற்றவுடன் நாம் எமக்குரிய நிரந்தர வீட்டிற்குச் சென்று விடுவோம். பில்லி கிறகம் என்கின்ற இறைபணியாளர் கூறுவார் “நான் எனது இல்லமான விண்ணுலகம் நோக்கிப் பயணம் செய்கின் றேன். இப்புவியினூடாக நான் சிறிது காலம் பயணம் செய்கின்றேன். இப்பயணம் முடிந்தவுடன் என் இல்லம் நல்கிவிடுவேன்” எனவே நாம் வாடகைக்கு இருக்க இறைவன் தந்த இப்பிரபஞ்சத்தை நல்லமுறையில் பயன் படுத்தி, பாதுகாத்து எமது வழிவருவோருக்கு நல்ல முறையில் கொடுத்துவிட்டுச் செல்வதே எமது பணி. இப் பணியின் பொருளை இக் கூட்டொருங்கியக்க ஆயத்தக் காலத்தில் நன்கு தியானித்து பிரபஞ்சத்தைப் பாதுகாக்கப் பணியாற்றுவோம்.


அருட்பணி. தே. யூட்தாஸ்

---

இவ்வளவு இருக்கும்போது நூல்கள் தேவையா?

# நூல்கள் போய்விடுமா?

இது கணினியுகம்! இணையத்தளங்கள் ஆட்சி செய்யும் காலம் கணினிகள் வந்தபோதே இனி நூல் கள் தேவை இல்லை என்றார்கள்! எல்லாம் இணைய தளத்தில் கிடைத்து விடுகிறது என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! இப்போது குறுந்தட்டுகளில் பைபிள் தொடங்கி



எல்லா வகை யான நூல்களும் வந்துவிட மாண வர்களுக்கு ஆசிரி யர்களே தேவை இல்லை என்று விளம்பரம் செய்கி றார்கள்! இதை நம்பிப் பலர் பணம் செலவு செய்கிறார்கள்! இதையும் தாண்டி, இப்போது நமக்குத் தேவையான பல நல்ல செய்திகளைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அழகாகத் தருகின்றன! வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், வணி கம், உடல்நலம் என்று எல்லாச் செய்திகளும் நமது தொலைக்காட்சிப் பெட்டியிலேயே கிடைக்கிறது. (ஆனால் நாம் தொலைக்காட்சிப் பெட்டியில் இந்த வகை நிகழ்ச்சி களைத்தான் பார்த்து மகிழ்கிறோமா என்பது வேறு கேள்வி?)

இவ்வளவு இருக்கும்போது நூல்கள் தேவையா? வாசிக்கும் பழக்கம் தேவையா? வருங்காலத்தில் நூல் கள் இருக்குமா? இப்படிப் பலருக்கும் சந்தேகம் வருகிறது! ஆனால் ஒன்றைக் கவனித்தீர்களா? இந்த மின்னணு யுகத்திலும் செய்தித்தாள்கள் வளர்கின்றன. வார, மாத இதழ்கள் சக்கைப்போடு போடுகின்றன! புதுப் புது எழுத் தாளர்கள் உருவெடுக்கிறார்கள்! ஏராளமான சிந்தனை கள் நூல் வடிவம் பெறுகின்றன! வரவேற்பைப் பெறு கின்றன.

நூல் என்பது வெறும் வார்த்தைகளின் தொகுப்பல்ல! ஓர் ஆசிரியனுக்கும் வாசகனுக்கும் இடையில் ஏற்படுகின்ற உணர்வுப்பூர்வமான உறவு புதுப் புது அர்த்தங்களை அடையாளம் காட்டும் உறவு மொழி! நட்பு காதல் சக்தி! பாடம் நல்ல உணர்வுகள் வாழும்வரை, புத்தகங்களோடு நமக்குள்ள உறவும் வாழும் வளரும்!

---

## அமல உற்பவ அன்னை..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**மாதா இயேசுவின் பாடுகளில் பங்கு பற்றினார்**

இயேசுவின் சிலுவை அருகில் அவருடைய தாய் நின்று கொண்டிருந்தார் (யோவா 19 - 25), மாதாவைப் போல நாமும் இயேசுவின் பாடுகளில் பங்குபெற வேண்டும்.

முடிவாக இயேசுவின் வாழ்வில் மாதா முற்றிலும் இணைந்தவர். இயேசுவைத் தம் உதரத்தில் கருத்தாங்கியது முதல், அவர் மரணம் வரை முற்றிலும் இணைந்திருந்தார்.

மற்ற சீடர்கள், இயேசுவுக்கு முப்பது வயது நடத்த போதுதான் சீடர்கள் ஆனார்கள், மாதா இயேசுவின் வாழ்நாள் எல்லாம், இயேசுவை முழுமையாக அறிந்து அன்பு செய்தவர். மாதாவைப் போல நாமும் தூய்மையாய் வாழ்வோம். மாதா பக்தியை பார்ப்போம். மாதா பக்தியைப் பிறருக்கும் காட்டுவோம்.

அம்பா தாயே, என்னையும் மகனிடம் நீர் அழைத்துச் செல்வது போல, இதை வாசிக்கும் ஒவ்வொருவரையும் உம் மகன் இயேசுவிடம் அழைத்துச் செல்லும்.

# அமல உற்பவ அன்னை இயேசு தந்த கொடை

**இயேசு தந்த நான்கு கொடைகள்**

இயேசு நமக்கு நான்கு கொடைகளைத் தந்திருக்கிறார்.
1. தம் உடலையும், இரத்தத்தையும் நற்கருணையில் நமக்கு உணவாகவும், பானமாகவும் தந்திருக்கிறார்.
2. தம் ஆவியை, தூய ஆவியை நிறை உண்மையை நோக்கி வழி நடத்தத் தந்திருக்கிறார்.
3. தமது வார்த்தையை (திருவிவிலியத்தை) வாழ்வு தரும் வார்த்தையாக நமக்குத் தந்திருக்கிறார்.
4. தம் தாயை நம்மை அன்பு செய்யும் தாயாகத் தந்திருக்கிறார்.

இந்த நான்கு கொடை-களும் நாம் ஞான வாழ்வில் வளர மிகமிக அவசியம். இதில் ஒன்றைக் கைவிட்டாலும் நம் ஞான வாழ்வு வளம் பெறாது. ஒரு நாற்காலிக்கு நான்கு கால்கள் இருப்பதுபோல நம் ஞானவாழ்விற்கும் நான்கு தூண்களாக இவை அமைந்திருக்கின்றன.

**இதோ உன் தாய்**

(யோவா 19: 27)

இயேசு மரிப்பதற்கு முன்பு தம் தாயையும், அருகில் நின்ற அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், "அம்மா இவரே உம் மகன்" என்றார். பின்னர் "தம் சீடரிடம், இவரே உம் தாய்" என்றார். அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரித்து வந்தார்.

(யோவா 19: 26, 27)

இது பொருள் பொதிந்த ஒரு காட்சி, இயேசு சிலுவையிய தொங்கும் போது அவரிடமிருந்த ஒரே சொத்து, அவர் தாய்தான், அந்தச் சொத்தையும், "இதோ உன் தாய்" என்று நமக்கு எழுதி வைத்துவிட்டுத்தான் இறந்தார். இயேசுவின் சீடர்கள் ஒவ்வொருவருக்கும் மாதா தாய் தான். மாதாவை யோவான் தம் வீட்டில் ஏற்று ஆதரித்து வந்தார். நாமும் மாதாவை நம் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுப் போற்ற வேண்டும். மாதா நம் குலத்தில் ஒருவர் யாராவது இயேசுவின் தாயை, தம் தாயாக ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா? "இதோ உன் தாய்" என்ற இயேசுவின் குரல் உலகிலுள்ள ஒவ்வொருவரையும் பார்த்து ஒலித்துக் கொண்டே இருக்கிறது

மாதாவை, "அம்மா என்று அழைப்பதில்தான் எத்துணை இன்பம்! மாதாவின் அன்பைப் பருகுவதில்தான் எத்துணை மகிழ்ச்சி எத்துணை நிறைவு!

**இயேசு தம் தாயை நிறைவாக அன்பு செய்தார்**

எத்தனை முறை இயேக மாதாவை, "அம்மா" என்று அழைத்திருப் பார்! எத்தனை முறை மாதா தம் அன்பு மகனை மார்போடு அணைத்து முத்தம் கொடுத்திருப்பார். மாதா பாலூட்டி வளர்த்த மகன் இயேசு மாதாவுக்கும் இயேசுவுக்கும் உள்ள அன்பு உறவின் ஆழம், அகலத்தை யார் அறிய முடியும்?

மாதா எனக்கும் தாய், நானும் மாதாவை, "அம்மா" என்று அழைத்து மகிழலாம். அவள் அன்பைப் பருக லாம், அவள் அன்பு மடியில் தவழ்ந்து விளையாடலாம். "நீங்கள் பால் பருகு வீர்கள், மார்பில் அணைத்துச் சுமக்கப் படுவீர்கள், மடியில் வைத்துத் தாலாட்டப் படுவீர்கள். தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன், எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள்." (எசா 66 : 12, 136)

இயேசு தம் தாய் வழியாக நம்மை தேற்றுகிறார்.

"நீங்கள் மனம் திரும்பி, சிறு பிள்ளைகளைப் போல் ஆகாவிடில் விண்ணரசில் புகமாட்டர்கள் (மத். 18:3) மாதா அருள் நிறைந்தவள். நாமும் அவள் அருளில் பிறக்க வேண்டும். அவள் பிள்ளையாகப் பிறக்க வேண்டும். இது தூய ஆவியில் பிறப்பது.

(யோவா 3: 3, 5)

நாம் கடவுளை, 'அப்பா தந்தாய்' என்று அழைப்பது போல் மாதாவை, 'அம்மா மரியே' என்று அழைக்க வேண் டும். இயேசு செய்தது இதுதானே இறைவனை, 'அப்பா' என்று அழைத்தார். நம்மை அழைக்கச் சொன்னார். மாதாவை, 'அம்மா' என்று இயேசு அழைத் தார். நாமும் மாதாவை, 'அம்மா' என்று அழைக்கும் உரிமையை நமக்குத் தந்திருக்கிறார். ஆவியில் பிறந்தால்தான் மாதாவை, அம்மா' என்று அழைக்க முடியும்.

**கன்னி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம்**

(மத். 1 : 20)

ஆண்டவரின் தூதர் யோசேப் புக்குக் கனவில் தோன்றி, "மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம்" என் றார், (மத்.1:20 ) பிரிந்த சகோதரர்கள் மாதாவை ஏற்றுக் கொள்ள அஞ்சுகிறார் கள். இது சரியா? இயேசுவை மீட்பராக ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருமே மாதாவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவிடம், "நீர்தான் எனக்கு வேண்டும். உம் தாய் எனக்கு வேண்டாம்" என்று சொல்வது சரியா? இவ்வுலக அரசனைப் பார்த்து குடிமக்கள், "நீர் எங்களுக்கு அரசனாக வேண்டும். உம் தாய் எங்களுக்கு வேண்டாம்" என்றால், அந்த அரசன் அந்த மக்களை ஏற்றுக் கொள்வாரா? தம் தாயை ஏற்றுக் கொள்ளாத ஒருவரை, இயேசு ஏற்றுக் கொள்வாரா?

**தாயையும் மகனையும் பிரிக்க முடியாது**

தாயையும், குழந்தையையும் பிரிக்க முடியாது, இணைந்தே இருப் பார்கள். பெத்லேகேமில் இடையர்கள் விரைந்து சென்று, மரியாவையும் யோசேப்பையும், தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண் டார்கள். (லூக். 2:16) முதலில் மரியா வைத்தான் கண்டார்கள். கீழ்த்திசை ஞானி கள் வீட்டிற்குள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள். (மத்.2:11)
"கல்வாரி மலையில், சிலுவையின் அருகில் இயேசுவின் தாய் நின்று கொண்டிருந்தாள்". (யோவா 19:25)

வேதனைப்படும் மகனை விட்டு தாய் விலகுவாளா? புனித இஞ்ஞாசி யாரின் காட்சித் தியானத்தின்படி இந்தக் காட்சிகளைத் தியானிக்கும்போது, இயேசுவின் தாய் எப்போதும் அங்கு இருப்பார். தாயையும் குழந்தையையும் பிரிக்க முடியாது. குழந்தை இருக்கும் இடத்திலேயே தாயும் இருப்பார்.



அருட்பணி X.சவரிமுத்து (சே.ச)

**மாதா நம்மோடு செபிக்கிறார். நமக்காகச் செபிக்கிறார்**

"சீடர்கள் அனைவரும் இயேசு வின் தாய் மரியாவோடு இணைந்து ஒரே மனதோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்".

(திப. 1:14)

புனித இஞ்ஞாசியார், " அம்மா மரியே உம் மகனோடு என்னை வைத் தருளும்" என்று செபிக்கச் சொல்லுவார். நான் திருப்பலி நிறைவேற்றும் போது, இயேசுவோடும் மாதாவோடும் இணைந்தே திருப்பலியை ஒப்புக் கொடுக்கிறேன். திருப்பலி கல்வாரிப்பலி, எவ்வளவு இயேசுவோடும். மாதா வோடும் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கிறேனோ, அந்த அளவு அது பலன் அளிக்கும்.

கானாவூர்த் திருமணவிழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி, "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்றார். தாய்க்குரிய உரிமை-யோடு அந்த மணமக்களுக்காகப் பரிந்துபேசினார் நமக்காகவும் மாதா தம் மகனிடம் பரிந்து பேசிச் செபிக் கிறார். எனவேதான் மாதா திருத்தலங் களில் மக்கள் கூட்டம் அலைமோது கிறது. மாதா நமக்காகப் பரிந்து பேசிச் செபிக்கிறார் என்பதற்கு (வேளாங் கண்ணி, பூண்டி, ஏலாக்குறிச்சி) மாதா வின் திருத்தலங்கள் சான்றாகும்.

**அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்**

( யோவா 2:5)

இயேசுவின் தாய் பணியாளர்களிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றார். ( யோவா 2:5) மாதா மக்களை இயேசுவிடமிருந்து பிரிப்பவர் அல்லர்: இணைப்பவா.. இயேசு சொல்வதை எல்லாம் செய்து, அவர்தம் சீடர்களாக வாழுங்கள். இது தான் மாதா நமக்கு வழாங்கும் அறிவுரை.

**மாதா இறைவனின் தாய்**

"மாதா, இறைவனின் தாய்" என்று திருவிவிலியம் கூறுகிறது.) எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு உரத்த குரலில், "என் ஆண்டவரின் தாய்" என்னிடம் வர நான் யார்? (லூக். 1: 41-43) என்றார். கபிரியேல் தூதர் மாதாவிடம் 'தூய ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும் ஆதலின் பிறக்கும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன்' எனப்படும்" (லூக். 1:16)

ஆம், மாதா " ஆண்டவரின் தாய்", அவர் மகன் இறைமகன்" எனவே அவர் இறைவனின் தாய், மாதா பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர். (லூக் 1:42)

**மாதா போற்றுவதற்கு உரியவர்**

"இது முதல் எல்லாத் தலை முறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்று போற்றுவர்". (லூக். 1:48) வானதூதர் மாதாவை "அருள் மிகப் பெற்றவரே" (லூக். 1:28) என்று வாழ்த்தினார். நாமும் ! கபிரியேல் தூதர் வாழ்த்தியது போல மாதாவை வாழ்த்துவோம் ! போற்றுவோம். இயேசு தம் தாய்க்கு வணக்கம் செலுத்தி இருப்பாரோ எந்த மகன் தன் தாய்க்கு வணக்கம் செலுத்தாமல் இருப்பார்? பத்துக் கட்டளைகளில் நான்காவது கட்டளை அதுதானே. "தாய், தந்தையரை மதித்துப் பேணு" நாமும் மாதாவை நம் தாயாக மதித்து வணக்கம் செலுத்துவோம்.

**மாதாவின் வாழ்வு, நம் வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு**

**1) மாதா விசுவசித்தவர்**

"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பும் நீர் பேறு பெற்றவர்" (லூக் 1:43). இந்த இறைவார்த்தை நிறைவேறும் என்று மாதா விசுவசித்தது போல நாமும் இறைவார்த்தையை விசுவசிக்க வேண்டும்..

**மாதா இறைசித்தத்திற்குப் பணித்தவர்**

"நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:14), மாதா இறைச்சித்தத்திற்குப் பணிந்தது போல நாமும் தினமும் இறைச் சித்தத்திற்கு முற்றிலும் பணிய வேண்டும்.

**மாதா தம்மைத் தாழ்த்தினார்**

அவர் தம் அடிமையின் தாழ் நிலையைக் கண்ணோக்கினார் (லூக். 1:48), மாதாவைப் போல நாமும் நம்மைத் தாழ்த்துவோம்.

**மாதா இறைவார்த்தையைத் தியானித்தார்**

"மரியா இந்நிகழ்ச்சிகளை எல்லாம், தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார்" (லூக், 2:10) நாமும் இறைவார்த்தையைத் தியானிக்க வேண்டும்.

**5 அவருடைய தாய் "இத்திகழ்ச்சி களை எல்லாம், தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்.** (2 51)

நாம் நமக்கு முன்பு நடந்த கசப்பான நிகழ்வுகளைப் பதித்து வைத்துள்ளோம். அதுதான் மனநோய், மாதாவைப் போல இறைவார்த்தையை நம் உள்ளத்தில் பதித்து வைப்போம். மாதா பணிவிடை புரிந்தார் மரியா விரைந்து சென்று எலிசபெத்துக் குப் பணிவிடை புரிந்தார். (லூக 1 : 39) நாமும் மாதாவைப் போல பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

**7) மாதா ஆண்டவரைப் புகழ்ந்தார்**

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது". (லூக் 1:47) நாமும் மாதாவைப் போல ஆண்டவரைப் புகழ்ந்து பெருமைப்படுத்த வேண்டும்.

(தொடர்ச்சி 7ம் பக்.)

# ஏன் கேள்விக்கென்ன பதில்!




*(அன்ரனி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சிலருக்கு ஒன்றும் தெரியா விட்டாலும் எல்லாம் தெரிந்தவர்கள் போல தாங்கள்தான் புத்திசாலிகள் போல காட்டிக்கொள்கின்றார்களே! என்ன காரணம்?**

**ப:** வேறென்ன காரணம்! வருத்தம்தான் காரணம்! அன்ரனி, உண்மையான புத்தி சாலி யார் தெரியுமா? 'எல்லாம் தெரிந்த மாதிரிக் கதைக்கின்றவர்களிடத்தில் எதுவுமே தெரியாத மாதிரி நடந்து கொள் கின்றவர்கள்தான் புத்திசாலிகள்!' என எங்கோ வாசித்தவை உங்களின் கேள் வியை வாசித்தபோது என் நினைவில் வந்து நிழலாடுகின்றன!

*(சீலன், யாழ்ப்பாணம்)*

**கே: இலங்கை பெரும் பொருளா தாரப் பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்டு இருக்கின்றது. தனி மனி தர்கள் மட்டுமல்ல நாடும் கடனில் தான் ஓடிக்கொண்டிருக்கின்றது. இப் படியே போனால் நாடு என்னாகுமோ?**

**ப:** சீலன், எல்லோருடைய மனங்களிலும் உள்ள ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருக் கின்றீர்கள்! ஒரு மாணவனிடம், "இலங்கை எதனால் சூழப்பட்டுள்ளது?" என்ற கேள்வி யைக் கேட்டபோது அவன், 'கடலால் சூழப் பட்டது' என்பதற்குப் பதிலாகக் 'கடனால் சூழப்பட்டுள்ளது!' என எழுதியிருக்கின் றான். இதாவது பறவாயில்லை! இன்னொரு கேள்வியாக, "இலங்கையின் தேசிய கீதம் எது?" எனக் கேட்டபோது, 'மெனிங்கே மகே சித்தே' எனப் பதில்கூறி இருக்கின் றான். எந்த நிலையில் நம் நாடு இருக்கின் றது என்பதற்கு இவற்றைவிட வேறு உதாரணங்கள் தேவையா சீலன்?

*(குணம், யாழ்ப்பாணம்)*

**கே: வடக்குக் கிழக்கு ஆயர் மன் றம் விடுத்த போரினால் இறந்துபோன வர்களுக்காக வழிபாடு செலுத்துதல் குறித்த அழைப்புக்கு பெரும் விமர் சனங்கள் எழுந்திருந்தனவே! ஏன்?**

**ப:** குணம், ஒரு வகையில் இயலாமை யின் வெளிப்பாடுதான்! அரச இயந்திரம் திட்டமிட்டுஎமதுநினைவாலயங்களையும் நினைவுத் தூபிகளையும் நினைவுரிமை யையும் நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கின் றது. அதனைத் தட்டிக் கேட்பதற்கு வக் கில்லாதவர்கள் வீட்டுக்குள் நின்று கொண்டு விதண்டாவாதம் பேசுகின்றார் கள்! இதனால், சேதமாகிச் சின்னாபின்ன மாவது நாங்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ளாத புத்திசாலிகளை என்ன செய்ய லாம் குணம்!

*(ஜெயா பாலாஜி, முருங்கன்)*

**கே: தாயைப்பற்றிய படங்களும் பாடல்களுமே முன்னர் அதிகமிருந் தன. தற்போது தந்தையின் அன்பைச் சொல்கின்ற திரைப்படங்களும் பாடல்களும் அதிகம் வெளிவருகின் றன. இது வரவேற்கத்தக்க மாற்றம் இல்லையா?**

**ப:** நிச்சயமாக ஜெயாக்கா. மிக நீண்ட காலமாக அம்மாமார் பார்க்கின்ற வேலை களான சமைத்தல், வீட்டைக்கூட்டி துப் பரவு செய்தல், பிள்ளைகளைப் பராமரித் தல், உடுப்புகளைத்தோய்த்தல், சட்டிபானை கழுவுதல் போன்ற பணிகளிலே அப்பா மாரும் பார்க்கப் பங்கெடுக்கத் தொடங்கியி ருப்பதாலே அப்பாமாரைப் பற்றியும் பாடல்கள்எழுதவேண்டிய, திரைப்படங்கள் எடுக்கவேண்டிய நிலைமை வந்துவிட்டது என்றும் இம்மாற்றத்திற்கான கார ணத்தை நோக்கலாம். உண்மையில் வர வேற்கத்தக்க மாற்றம்தான்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(கலா, யாழ்ப்பாணம்)*

**கே: சிலின்டர் அடுப்புக்கள் அடுத் தடுத்து வெடிக்கின்றன. என்ன செய்ய லாம்?**

**ப:** கலா, சிலின்டர் பாவனையை விட்டு விடுங்கள், வெடிக்காது! நாட்டில் எல்லா வற்றுக்குள்ளும் அரசியல் புகுந்து விளை யாடுகின்றது! அவ்வகையில், சிலின்ரருக் குள்ளும் அரசியல் புகுந்துவிட்டது. அத னால் ஏற்படும் விளைவுகளே சிலின்ரர் வெடிப்புக்கள்! என்ன செய்வது கலா? விறகு அடுப்புகளை மறக்கச் செய்து புதிய கலாசாரத்திற்குள் நம்மைப் பழக்கப் படுத்தி விறகுப் பாவனையை முற்றாகவே நாம் இழந்துவிட்டதனால் சிலின்ரருக்குள் சிக்குண்டு போய்க் கிடக்கின்றோம். இன் றைய நாட்களிலும் இனிவரும் நாட்களி லும் விறகுப் பாவனைக்குப் போவதுதான் உசிதமானதுபோல் படுகின்றது! எனினும், கொழும்பு போன்ற நகரப் பகுதிகளி லும் அடுக்குமாடிக் குடியிருப்புக்களிலும் வாழ்பவர்கள் விறகில் சமைப்பதை நினைத்தும் பார்க்கமுடியாது. 'எப்போது வெடிக்குமோ!' எனப் பயந்து பயந்து பாதி வாழ்க்கை முடிந்துவிடும் நிலைமையில் தான் இன்றைய வாழ்க்கை இருக்கின்றது!

**அருட்பணி செ. அன்புராசா**

# திருவழிபாடும் நமது அன்பியமும்



**1. அன்பியத்தில் திருவழிபாடு**

திருவழிபாடு, திரு அவையின் செயல் முழுவதுமேநாடிநிற்கும்சிகரமாகஅமைந் துள்ளது. அத்துடன் திரு அவையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றா கவும் உள்ளது (திவ 10). மேலும் திரு வழிபாட்டில், மிகச் சிறப்பாகத் தூய்மை மிகு நற்கருணைப் பலியில், கிறிஸ்துவின் உடனிருப்பு வழியாகவும் கிறிஸ்துவின், திரு அவையின் திருப்பணிகள் வழியாக வும் "நமது மீட்பு அலுவல் நடந்தேறுகி றது" (திவ 7, 2).

திருப்பலிக்கொண்டாட்டம்கிறிஸ் துவும் திரு ஆட்சி முறைப்படி அமைந்த இறைமக்களும் சேர்ந்து ஆற்றும் செயல் ஆகும். எனவே அது அனைத்துலகத் திரு அவையினுடையவும் தலத் திரு அவையினுடையவும் நம்பிக்கையாளர் ஒவ்வொருவருடையவும் முழுமையான கிறிஸ்தவ வாழ்வின் மையம் ஆகும் (திவ 41 தி 11). ஏனெனில் திருப்பலிக் கொண்டாட்டத்தில்தான் கடவுள் கிறிஸ்து வில் உலகைப் புனிதப்படுத்தும் செய லின் சிகரம் அமைந்துள்ளது இதில்தான் மக்கள் கிறிஸ்து வழியாகத் தூய ஆவியா ரில் தந்தைக்குச் செலுத்தும் வழிபாடு நடைபெறுகின்றது (திவ 10),

எல்லா புனிதச் செயல்களும், கிறிஸ்தவ வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளும் திருப்பலியோடு இணைந்து, அதிலி ருந்து தொடங்கி, அதை நோக்கியே நாடி நிற்கின்றன. உண்மையில், திரு அவை யின் அருள்வளம் முழுவதும் தூய்மை மிகு நற்கருணையில் அடங்கியிருக்கிறது (திருப்பணியாளர்கள், 5).

எனவே திருப்பணியாளர்களும் நம்பிக்கையாளரும் தத்தம் நிலைகளுக்கு ஏற்பத் திருப்பலியில் பங்கேற்று, அதன் பயன்களை நிறைவாகப் பெறுவது மிக வும் அவசியம் (திவ 26).

இவற்றைஅடைவதற்காகஆண் டவராகிய கிறிஸ்து தம் உடலாலும் இரத்தத்தாலுமான நற்கருணைப் பலியை நிறுவி, அதைத் தம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் நினைவுச் சின்ன மாகத்தம் அன்பு மணமகளாம் திரு அவை யிடம் ஒப்படைத்தார் (திவ 47). இதன் பயனாக, நம்பிக்கையாளர் பொருள் உணர்ந்தும் செயல் முறையிலும் முழு மையாகவும் பங்கு கொள்வதற்குத் தூண் டப்பட வேண்டும். அதாவது, அவர்கள் ஆர்வமிக்க நம்பிக்கையுடனும், எதிர் நோக்குடனும், அன்புடனும், உள்ளத்தா லும் உடலாலும் செயல் முறையிலும் முழு மையாகவும் இக்கொண்டாட்டத்தில் பங்கு கொள்வதைத் திரு அவை மிகவே விரும்பு கிறது இது கொண்டாட்டத்தின் இயல் புக்கே இன்றியமையாதது. இது திருமுழுக் கினால் கிறிஸ்தவ மக்களின் உரிமை யும் கடமையும் ஆகின்றது (திவ 14).

இவ்வாறு திருமுழுக்குப் பெற்ற அனை- வரும் முழுமையாகவும் ஈடுபாட்டோடும் திருவழிபாட்டில் பங்கேற்க மிகவும் அடித் தளமாக இருப்பது அன்பியமாகும்.

**2. அன்பிய வழிபாடு ஓர் அனுபவ வழிபாடு:**

தனி வழிபாடு திரு அவை என்பது மக்கள் சமூகமாகச் சேர்ந்து ஒன்றாகக் கூடி வருதலாகும். உறவில்லாத சமூகம் திரு அவை கிடையாது. உறவுச் சமூகங்க ளைக் கட்டியெழுப்பியது அடிப்படை அன்பி யங்களாகும். திரு அவையிலும் சமூகத்தி லும் மாற்றம் வரமுடியும். இத்தகைய அடிப் படை மாற்றுச் செயற்பாடுகளுக்கு ஊற் றாக இருப்பது வாழ்வோடு இணைந்த வழிபாடுகள். இவற்றைக் குழு வழிபாட- ாகவோ, தனி வழிபாடாகவோ கொண் டாவதற்கு அன்பிய வழிபாடுகள் உதவி புரிகின்றன.

**3. புதிய வழிபாடு**

பொது நலனை மனத்தில் கொண்டு பொது இடத்தில் கூடி, சமூக, சமய, பொருளாதார, அரசி யல் நிலைகளை இறைவார்த்தை யின் அடிப்படையில் ஆராய்ந்து திட்டங்கள் தீட்டுவதே இப்புதிய வழிபாட்டின் சிறப்பு அம்சம். வாழ்க்கை, சூழல், நிகழ்வு, சிக்கல் ஆகியவற்றை விவிலிய அடிப்படையில் ஆய்ந்து தீர்மானித்து அதற்கு முடிவு காண்பது. திருப்பலி, நற்செய்திக் கூட்டம், திருப்புகழ்மாலை, அருளடையாளங்கள், ஆசிகள் ஆகியவை அடங்கிய அனுபவங் கள் வழிபாட்டில் இடம் பெறுவதால், பொதுவான அனுபவம் கொண்ட புதிய வழிபாடாக இது மாறுகிறது.

*அருட்பணி எஸ்.அற்புதராஜ்*
*பொதுச்செயலர்,*
*தமிழக திருவழிபாட்டுப் பணிக்குழு*

**4. கொண்டாடுவோம்**

நேரடியாக, மறைமுகமாக, சமூக, ஊர்ப் பிரச்சினைகள் ஆகியவை அன்பியங் களைப் பாதிக்கும் பொது அனுபவங்கள் தனி ஒருவரின், குடும்ப அனுபவம் - வழி பாட்டில் இடம்பெறுவதால் அதைக் கொண் டாடும்போது, அது வழிபாட்டில் ஒரு அனு பவமாக மாறுகின்றது.

**5. நம் வாழ்வு**

அன்பிய வழிபாடுகளில் குடும்ப உணர்வு அதிகம். இது நம் வாழ்வு. இது ஒரு சிறிய குழுவாக இருப்பதால், எல்லோரும் நன்கு அறிமுகமானவர்களாக மாறுகின்றனர். படைப்பாற்றலே செயற்பாடுகளாக மாறு கிறது. இந்தப் பங்கேற்பு, வழிபாட்டை வாழ் வோடு இணைக்கிறது. உறவு மேம்படு கிறது. வழிபாட்டில் வாழ்க்கையைப் பற் றிய புரிதல் - புதிய பரிமாணங்கள், புதிய பார்வை - புதிய வாழ்வு ஆகியவை கிடைக்கின்றன.

**6. வழிபாடு - ஒரு புதிய மாதிரிப் பாடம்**

1. தொடக்க வழிபாடு : பாடல் அல்லது செபம்
2. முன்னுரை : வழிபாட்டில் மையச் சிந்தனை
3. அனுபவப் பகிர்வு : மையச் சிந்த னையின் அடிப்படையில் அனுபவம்திரு அவைக் கருத்து. பொதுக் கருத்து
4. இறைவார்த்தைப் பகிர்வு : ஏற்ற விவி லியப் பகுதி அனுபவத்தோடு இணைத்து பணிகள் பற்றி விளக்குதல்
5. தீர்மானம் : பகிர்வின் அடிப்படையில் அனைவரும் இணைந்து
6. இயேசு கற்றுத் தந்த இறைவேண்டல் : பொருத்தமான மன்றாட்டும் சொல்லி நிறைவு செய்தல்
7. இறுதிப் பாடல்

**7. பொதுவழிபாட்டில் அன்பியம்**

ஒவ்வொரு அன்பியத்திலிருந்தும் வழிபாட்டில் ஆர்வமும், பக்தியுமுள்ள நபர் ஒருவர் அல்லது இருவர் அன்பியத்திலி ருந்து திருவழிபாட்டுக் குழுவிற்கு பொறுப் பாளராக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

பங்கு ஆலயத்தில் நடைபெற இருக்கின்ற, திருவழிபாட்டு நிகழ்வுகளை, அன்பியத்திலிருந்து பங்கிற்கும், பங்கிலி ருந்து அன்பியத்திற்கும் பரிமாறுவது அவர் களது கடமையாகும். அவர்கள் முன் னுரை, வாசகம், மன்றாட்டுகள் போன்ற தயாரிப்புகளில் முன்னின்று நடத்துகின் றார்கள். இவ்வாறு,

- பொருளுள்ள விதத்தில் அன்பிய வழிபாடுகள், பங்கு வழிபாடுகளுக்கு உதவுகின்றன.
- பொது வழிபாட்டில் அவை அனுபவம் கலத்தலாக மாறுகின்றன. மக்களின் பங்கேற்பு அதிகரிக்கிறது.
- அன்பிய வழிபாடு ஓர் பொது வழிபாடாக மாறுகிறது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# காவலன் கலசம்

# வாழ்வியற் திறன்கள்



அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி.

"ஒரு பிள்ளை தனது வாழ்க்கையை ஆரம்பிக்கும்பொழுது அது ஒரு வெற்றுத் தாளாகவே இருக்கின்றது. சூழல்சார் அனுபவங்களே அதன் விருத்தியில் முழு செல்வாக்கைச் செலுத்துகின்றன" என்று பிரித்தானிய சிந்தனையாளர் ஜோண் லொக் அனுபவ ரீதியான கற்றலுக்கு புதியமுறையில் சிந்திப்பதற்கு வித்திட்டார்.

◆ பிள்ளைகளே, இளையோரே, வாருங்கள். நான் உங்களை அன்போடு தேடுகின்றேன். உங்களது ஆற்றல்களையிட்டு மகிழ்வடைகின்றேன்.

◆ 'உங்களுக்கு நிகர் நீங்களே' என்பதை நினைவிற் கொள்ளுங்கள். உங்களைத் தேடுவது உங்களைக் காட்டிக் கொடுப்பதற்காக அன்று,

◆ உங்களை மட்டம் தட்டுவதற்காக அன்று, நீங்கள் சந்தோசமாக வாழ்வதைத் தட்டிக் கொடுப்பதற்காகவே.

◆ உங்களுக்குத் தண்டனை கொடுப்பதற்காக அன்று, உங்களோடு மனம்விட்டுப் பேசுவதற்காக, உங்களோடு நல்லுறவு கொள்வதற்காக, நான் உங்களை அழைக்கின்றேன்.

◆ அழிவுக் கலைகளை அம்பலப்படுத்துவதற்காக அன்று, மாறாக, உங்களது வாழ்வியற் திறன்களை வளர்ப்பதற்காக நான் உங்களை அழைக்கின்றேன்.

◆ அழவைப்பதற்காக அன்று, மாறாக, மகிழ்வோடு சிரிக்கவைப்பதற்காக, உங்களை நல்லவர்களாக வாழ வைப்பதற்காக, புதிய திறனாளிகளுக்கான சூழலைத் தோற்றுவிப்பதற்காக, நான் உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

நாளை என்று பின்போடாமல் உடனடியாகப் புது வாழ்வுப் பயணத்தை ஆரம்பியுங்கள். நல்ல சமூக உருவாக்கத்திற்கு நாம் எல்லோரும் இணைந்து பங்களிப்பு நல்கவேண்டும். நம்பிக்கை நட்சத்திரங்களாகச் சமுதாயத்தில் உருவெடுத்து வெளிச்சம் கொடுக்க விரைந்து வாருங்கள்.

**பிள்ளைகளே கவனியுங்கள்**

கல்லூரியில் கல்வி கற்று முடிந்ததும் கடமை முடிந்தது எனச் சிலர் தூங்குகின்றார்கள். பரீட்சைக்கு மட்டும்தான் படிப்பு, வாழ்க்கைக்கு அல்ல எனச் சிலர் தடுமாறுகின்றார்கள். வாலிப வயதை வயோதிப நிலைக்கு மாற்றிவரும் கயவர்களோடு இணைந்து, உங்களைத் தொலைத்து விடாதீர்கள்.

வயிறு வளர்ப்பதற்காக மட்டும் உயிர்வாழாது, பொன்னான நேரத்தை மண்ணாக்காது, திறன்களை இனம் கண்டு, உங்களது ஆற்றல்களை, உங்களது சிறப்பியல்புகளை இரட்டிப்பாக்கி மகிழ்வினை அனுபவியுங்கள். இளையோரே, உலக ஈர்ப்புக்களுக்கு இரையாகாது, மனிதத்தை நேசிக்க முன்வாருங்கள். வழிமேல் விழி வைத்து விழிநீர் துடைத்திட, ஏழைகளின் கண்ணீருக்கு வடிகால் அமைத்திட வாருங்கள். வழிகாட்டிகளாக மாறுங்கள்.

**மகிழ்வின் மலர்வு**

இங்கிரீட் பொக்மேன் சுவீடன் நாட்டு பிரபல நடிகையாவார். நாற்பது ஆண்டுகளாக சர்வதேச நட்சத்திரமாகத் திகழ்ந்த அவர் வாங்காத பரிசுகள் இல்லை. குவிக்காத செல்வம் இல்லை. ஒஸ்கார் பரிசு மூன்று முறை வாங்கியவர்.

பெண்மையின் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் இங்கிரிட் வாழ்ந்துகாட்டினார். எதற்காகவும் தன்மானத்தை இழக்காது விருப்போடு வாழ்ந்தார். ஐம்பது வயதில் மார்புப் புற்றுநோயிற்கு ஆளாகி, 1974ல் மார்பு அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார்.

1985ல் தொலைக்காட்சியில் இஸ்ரயேல் பிரதமர் கோல்டன் மேயராக நடிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. "மற்றவர்களுக்கு மகிழ்ச்சி என்றால் அது எனக்கும் மகிழ்ச்சியே" என்று ஏற்றுக்கொண்டார்.

இளையோரே, 'இயலாது' என்று பின்நோக்கி நகராமல் 'இயலும்' என்று முன்நோக்கிப் பாயுங்கள். இதுவே மகிழ்வான வாழ்விற்கான படிக் கல்லாகும். மகத்துவமான எண்ணங்களின் எச்சமாக மகிழ்வே எஞ்சி நிற்கின்றது.

தமக்காக உயிர் பிழைக்கும் தனிமரங்கள் கனி தரமாட்டா. தனிமரம் தோப்பாகாது. சோகம் போன்ற புயலைச் சோரம் போகவிட்டு, சாதனை வீரராகிச் சரித்திரம் படையுங்கள்.

## இறைவேண்டல்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப்பட்ட உறவினாலே ஏற்படும் பயன்பாடுகள் என்ன? இந்த உறவாடலின் பயனாக இறைவனின் பார்வைகள் எனது பார்வைகளாக மாறியதனால் என்னை நான் இறைவனின் அன்புப் பிள்ளையாக ஏற்று எந்நேரத்திலும் என்னைப் பற்றிய நேர்மறையான எண்ணங்களையே வளர்த்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல ஒவ்வொரு மனிதரையும் இறைவனின் அன்புப் பிள்ளையாக அற்புதப் படைப்பாக ஏற்று அன்பு செய்யத்தொடங்குகிறேன். என்னை நானாக, ஒவ்வொருவரையும் அவராக ஏற்றுக் கொள்ளத்தொடங்குகிறேன். இறைவனின் உணர்வே எனது உணர்வு ஆவதால் இறைவனது உணர்வுகளையும் எனது அன்புச் சகோதர சகோதரிகளின் உணர்வுகளையும் என்றும் மதித்து வாழப் பழகுகிறேன்.

இறைவனின் அன்பு எல்லையற்றது. எனவே, நானும் இனம், குலம், மதம் அனைத்தையும் கடந்து அனைவரையும் ஏற்று அரவணைக்கும் பண்புடன் வாழப் பழகுகிறேன். மற்றவர்களின், குறிப்பாக ஏழை எளியவர்கள், துன்புறுவோர், ஓரங்கட்டப்பட்டோரின் உணர்வுகளை என தாக்குகின்றேன். இறைவனுடைய ஆற்றல்கள் எனது ஆற்றல்கள் ஆகின்றன. அதேவேளை அநீதிகளைக் கண்டு வெகுண்டு எழும் இறை நீதியை எனதாக்குகின்றேன்.

இவ்வாறு இறை வேண்டலின் மூலம் நானும் படிப்படியாக உருமாற்றம் அடைந்து நான் வாழும் சமூகத்தையும் புத்துயிர் பெற்ற சமுதாயமாக மாற்ற முயல்கின்றேன். இன்னொருவிதத்தில் கூறினால் இறை ஆட்சியை அமைக்க எனது பங்களிப்பைச் செய்கிறேன். ஏனென்றால், "செயலற்ற இறைவேண்டல் செத்த இறைவேண்டல்" ஆகும்.

## தன்னலமற்ற வாழ்வு

எப்போதும் தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்கள் கியூயாட் பற்றிக் கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும். கியூயாட் ஒரு சாதாரண ஏழை பிரெஞ்சுக் குடிமகன். மார்செய்ல்ஸ் நகரில் வசித்த அவன் தனது கடின உழைப்பாலும், தரித்திர வாழ்வாலும் பெரும் செல்வம் சேர்த்தான். அவன் தன் உணவுக்காவும், உடைக்காகவும் மிக மிகக் குறைவாகச் செலவிட்டான். மக்கள் அவனைக் கருமி என்றனர். ஒரு சிலர் அவனைக் கேலி செய்தனர். குழந்தைகள் சில சமயம் அவன் மீது கற்களை வீசி எறிவார்கள்.

இந்த விரும்பப்படாத குடிமகன் ஒருநாள் இறந்தான். தன் சொத்துக்கள் பற்றிய ஓர் உயில் எழுதி வைத்திருந்தான் "என் வாழ்க்கை முழுவதும் மார்செய்ல்ஸ் நகர ஏழை மக்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப் படுவதையும், தண்ணீரை வாங்க அதிக செலவு செய்வதையும் கண்டு வந்தேன். அதனால் வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியோடு நான் கடினமாக உழைத்து அவர்களுக்கு இந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்க நினைத்தேன்.




என் சொத்து முழுவதையும் கொண்டு ஒரு நீர்த்தேக்கம் கட்டி மார்செய்ல்ஸில் வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாகத் தண்ணீர் கிடைக்க வழிசெய்ய வேண்டும் என அறிவுறுத்துகிறேன்" என்று கூறியிருந்தார். என் ஒரு தன்னலமற்ற தியாக வாழ்வு! பிறருக்காக வாழ்வதே வாழ்வு!

## தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. நே. யூட்தாஸ்

### நம்பிக்கையின் உண்மைகள்

**26. ஆள் தன்மையில் மூவராக இருக்கும் இவர்கள் மூன்று இறைவன்களாக இருக்கின்றார்களா?**

இல்லை, ஆள் தன்மையில் மூவராக இருக்கும் இவர்கள் மூன்று இறைவன்களாக இருப்பதில்லை. தந்தை, மகன், தூய ஆவியார் மூவரும் ஒரே இறைவனாக இருக்கின்றனர்.

**27. ஆள் தன்மையில் மூவராகவும் இறைத் தன்மையில் ஒருவராகவும் விளங்கும் இம் மறை பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

இம் மறைபொருளானது தூய மூவொரு இறைவன் மறைபொருள் அல்லது தூய திரித்துவ மறைபொருள் என அழைக்கப்படுகிறது.

**28. மறைபொருள் என்பதன் அர்த்தம் என்ன?**

மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மை இறைவனால் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் அவ் உண்மையானது மறைபொருளென அழைக்கப்படுகின்றது.

**29. உம்முடைய ஆன்மாவில் தூய மூவொரு இறைவனின்மறைபொருளின்சாயல்காணப்படுகின்றதா?**

ஆம், என்னுடைய ஆன்மாவில் தூய மூவொரு இறைவனின் மறைபொருளின் சாயல் காணப்படுகிறது, அதாவது ஒரே இறைவன் மூன்று ஆட்களாக செயற்படுவதுபோல் என்னுடைய ஒரே ஆன்மாவில் மூன்று வல்லமைகள் செயற்படுகின்றன.

**30. உமது ஆன்மாவில் காணப்படும் மூன்று வல்லமைகளும் எவை?**

எனது ஆன்மாவில் காணப்படும் மூன்று வல்லமைகளாவன: எனது ஞாபகசக்தி, எனது அறிவு அல்லது விளங்கிக் கொள்ளும் திறன், சித்தம்.

### நம்பிக்கை அறிக்கை இரண்டாவது பிரிவு

**31. நம்பிக்கை அறிக்கையின் இரண்டாவது பிரிவு என்ன?**

அவருடைய ஒரே மகனாகிய இயேசுக்கிறிஸ்துவையும் நம்புகிறேன்.

**32. யார் இந்த இயேசுக்கிறிஸ்து?**

இயேசுக்கிறிஸ்து இறைவனின் மகனாவார், எமக்காக மனிதனானார்.

**33.இயேசுக்கிறிஸ்து உண்மையாகவே இறைவனா?**

ஆம், இயேசுக்கிறிஸ்து உண்மையாகவே இறைவனாவார்.

**34. ஏன் இயேசுக்கிறிஸ்து உண்மையாகவே இறைவனாக இருக்கிறார் எனக் கூறுகின்றோம்?**

இயேசுக்கிறிஸ்து உண்மையாகவே இறைவன் காரணம் அவர் தந்தையாம் இறைவனின் ஒரே இயல்பைக் கொண்டுள்ளார்.

**35.இயேசுக்கிறிஸ்து எப்பொழுதும் இறைவனாக இருக்கின்றாரா?**

ஆம். இயேசுக்கிறிஸ்து எப்பொழுதும் இறைவனாக இருக்கின்றார், முடிவில்லாக் காலத்திற்கும் தந்தையாம் இறைவனோடு ஒன்றாய் இருக்கின்றார்.

**36. தூய மூவொரு இறைவன் மறைபொருளில் இயேசுக்கிறிஸ்து எத்தனையாம் ஆளாய் இருக்கிறார்?**

இயேசுக்கிறிஸ்து தூய மூவொரு இறைவன் மறைபொருளில் இரண்டாம் ஆளாய் இருக்கிறார்.

**37. இயேசுக்கிறிஸ்து உண்மையான மனிதராக இருக்கிறாரா?**

ஆம், இயேசுக்கிறிஸ்து உண்மையான மனிதராக இருக்கிறார்.

**38. இயேசுக்கிறிஸ்து உண்மையான மனிதராக இருக்கின்றாரென்று ஏன் அழைக்கின்றோம்?**

இயேசுக்கிறிஸ்து உண்மையான மனிதராக இருக்கிறார் என்பதன் காரணம் எங்களைப் போன்று உடலையும் ஆன்மாவையும் கொண்ட மனித இயல்பில் அவர் இருக்கின்றார்.

**39.இயேசுக்கிறிஸ்து எப்பொழுதும் மனிதனாகவா இருக்கின்றாரா?**

இல்லை. இயேசுக்கிறிஸ்து எப்பொழுதும் மனிதனாக இருப்பதில்லை, அவருடைய மனித உடல் ஏற்பு நிலையிலிருந்து தான் அவர் மனிதனாக இருக்கின்றார்.

**40.மனு உடல் ஏற்பு என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

இறைமகன் மனித இயல்பை தாங்கிக்கொண்ட நிலையையே மனு உடல் ஏற்பு என்பது குறித்துக் காட்டுகின்றது. "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14).

*(தொடரும்)*

# காவலன் கலசம்

சில நாட்களுக்கு முன்னர் என் செவிகளில் ஒலித்த “உண்மைக்குப் பொய்யாயிராதே, போலிக்கு உண்மையாயிராதே, உண்மைக்கு உண்மையாயிரு.” என்ற ஒரு குருவானவரின் வார்த்தைகள் இந்தக் கட்டுரையை எழுத என்னைத் தூண்டின. சத்தம் இன்றி யுத்தம் நடக்கும்இன்றையகாலகட்டத்தில்பிலாத்துவின் சொந்தக்காரர்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றார்கள். “பிலாத்துவின் சொந்தக்காரர்களா? அதுவும் இன்றைய காலகட்டத்திலா?” என்ன பைத்தியக்காரன் போல் பிதற்றுகிறான் இந்தச் சின்னப் பெடியன் என்று மனதிற்குள் எண்ணுகிறீர்களா? ஆம் சொந்தங்களே, பிலாத்துவின் சொந்தங்கள் தான். யார் இவர்கள்? “உண்மையா அது என்ன?” என்று பிலாத்து கேட்டது போல் உண்மைக்குவரைவிலக்கணம்கேட்பவர்கள் மாத்திரம் தானா? இல்லை. நிச்சயம் இல்லை. இவர்கள் உண்மை என்னவென்று நன்கு தெரிந்தவர்கள், ஆனால் நன்றாய்த் தெரியும் உண்மையை நன்கே மறைக்கவும் தெரிந்தவர்கள். தெளிவாய் மறைக்கும் அளவிற்குப் புத்தி படைத்த மேதாவிகள். தம்மால் மறைக்கப்படுவது உண்மை என்ற குற்ற உணர்வற்ற மரத்துப்போன மனிதர்கள். உண்மையை உண்மையென்று சொல்ல உள்ளத்தில் துணிவற்ற கோழைகள். நெஞ்சில் வலுவற்ற அங்கவீனர்கள். ஆசனத்திற்காய் போட்டி போடும் படித்த அறிவாளிகள். பிலாத்து போன்றவர்களால் உண்மைக்குச் சான்று பகர்ந்து சிதைந்து சின்னாபின்னமாகிப் போனவர்கள், நலிந்து நாசமாகி மறைந்தவர்கள் பலர் உண்டு. ஆனால் இவர்கள் வரலாற்றில் மறையாது வாழ்கிறார்கள் என்பது மறக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை. இலங்கையில் போரின் இறுதி நாட்களான 2008, 2009ம் காலப்பகுதியில் போரினை தடுக்கப்பலர் எடுத்த முயற்சியும் பயனின்றிப் போகவே, போர் கொடூரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது நடந்து முடிந்தது ஒரு இன அழிப்பு யுத்தம் என்றும், 2008 ஒக்டோபர் முதல் 2009 மே மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொகை 146697 பேர் என்றும் மறைந்த முன்னாள் மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை உரைத்த உண்மை என்றும் அழியாமல் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டதன்றோ?

“பெரும்பான்மையினர் கருத்து என்பதற்காக ஒரு கருத்து நியாயமான கருத்தாகி விட முடியாது. அக்கருத்து எந்த அளவிற்கு நியாயமானது, சரியானது, சட்டத்துக்கும் அறிவுக்கும் இசைந்தது என்பதைக் கொண்டே அக் கருத்து முறையானதா இல்லையா என்பதை நிலைநாட்ட முடியும்” என்ற தனிநாயகம் அடிகளாரின் வார்த்தைகள் என் இன்றைய தலைப்பிற்கு பலம் சேர்க்கும் என்று எண்ணுகின்றேன். ஒரு விடயம் எந்த இடத்தில் எப்போது பேசப்படுகிறது என்பதைக் கொண்டோ, அல்லது யாரால் எத்தனை நபர்களால் பேசப்படுகிறது என்பதைக் கொண்டோ அவ்விடயம் உண்மையானதா அல்லது பொய்யானதா என்று தீர்மானித்து விட முடியாது. ஏனெனில் உண்மை எந்த இடத்திலும் எப்பொழுதும் உண்மையே. பெரும்பான்மையானோர் பொய்யுரைப்பதால் பொய் ஒருபோதும் மெய்யாகி விட முடியாது. அதேபோல் தனியொருவன் உண்மையைப் பேசுவதால் அந்த உண்மை என்றும் பொய்யாகிவிட முடியாது.

“வாய்மையே வெல்லும்” என்பது நாம் அறிந்த நல்மொழியன்றோ? “நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே” என்பது எம் சகோதர மதம் கூறும் நற்சிந்தனையன்றோ? “பெரும்பான்மை என்பதை தவறாகப் புரிந்து கொண்டால் அது பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மைக்கு வழிவகுத்துவிடும்” என்பது அறிஞர் தோக்கலிசின் வாய்மொழியன்றோ?

ஆனால் இன்று எம் சமூகத்தில் இந்த உண்மைகள் மறைந்து விட்டனவா? அல்லது ஒரு வர்க்கத்தால் மறைக்கப்பட்டு விட்டனவா? என்பது எம் உள்ளத்தில் ஒரு கேள்வியாக எழுந்த வண்ணமே இருக்கிறது. ஏனெனில் எப்படியோ இருந்த இனம் இன்று சீர்கெட்டு இப்படி ஆகிவிட்டது. காரணம் பல உண்மைகள் இன்று மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்பட்டு விட்டன. இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன.




“ யாதேனும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துனையும் கல்லாதவாறு” என்ற வள்ளுவனின் ஈரடிகளை மறந்துவிட்டான் தமிழன்.

யாதும் ஊரே யாவரும் கேளீர். “பெரிதே உலகம் பேணுநர் பலரே” “எத்திசைச்செல்லினும்அத்திசைச்சோறே” எனும் தான் தன் வாழ்வியலாகக் கொண்ட புறநாநூற்றை மறந்துவிட்டான் தமிழன். என்ன நடந்தாலும் எனக்கென்ன வந்தது? இருந்த இடம் தெரியாமல் இருந்து விட்டுப் போவோம், என்ற குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். தான் அப்படி வாழ்வதே தவறு. உண்மைக்கு சான்று பகராமல் இருப்பதே பெரும் பாவம் என்பதை நன்கு அறிந்த பின்னரும் தன்னுடைய அந்தக் குறுகிய வட்டத்திற்குள் அடுத்தவனையும் இழுக்கப் பார்க்கின்றான்.

சொந்தங்களே, இந்த உலகு உணர்ந்த, ஏற்றுக்கொண்ட உண்மை ஒன்றே. அது “உண்மை என்றும் ஒன்றே” ஆட்களுக்கு ஏற்றாற் போல் நபர்களுக்கு ஏற்றாற் போல் மாறுவது உண்மையல்ல. உண்மை நேற்றும், இன்றும், என்றும் ஒன்றே.

2009ல் ஒருவிடயம் உண்மை என்றால் அதேவிடயம் 2020லும் உண்மையே. 2009ல் ஒருவிடயம் பொய் என்று சொன்னால் அதேவிடயம்2020லும்பொய்யே. ஒருவன் உண்மைக்கு சான்று பகர்பவன் என்று சொன்னால் அவன் எந்த நேரத்திலும் உண்மைக்காய் குரல் கொடுக்கத் துணிய வேண்டும். காலத்திற்கு ஏற்றாற் போல் சூழலுக்கு ஏற்றாற் போல், இனத்திற்கு ஏற்றாற்போல், மொழிக்கு ஏற்றாற் போல் மாத்திரம் குரலை எழுப்புபவன் உண்மைக்குச் சான்று பகர்பவன் ஆகிவிட முடியாது. இரு தாசாப்தத்தில் உண்மைக்கு சான்று பகர்ந்தவனை அடக்கிடத் துணிந்த ஒருவன் இன்னொரு தாசாப்தத்தில் உண்மைக் சான்று பகர்பவனாய் மாறி விட முடியாது. இன்று உண்மையை பேசுபவனை தீவிரவாதி என்று முத்திரை குத்திவிடுகிறது சமூகம். உண்மைக்கு குரல் கொடுத்த மனிதனை வெள்ளைப் புலி, புலி ஆதரவாளன் என்று குற்றம் சாட்டிய நாடு தானே எங்கள் நாடு. மனிதர்கள் காலப்போக்கில் மறைந்து போகலாம் ஆனால் அவர்களால் வெளிக் கொணரப்பட்ட உண்மைகள் என்றும் மறையாதவை, மறைக்கப்படப் முடியாதவை.

உண்மைக்காய் உலகம் ஏங்குவது அனைவரும் அறிந்த உண்மை.

உண்மையான உறவுகள், உண்மையான கருத்துக்கள், உண்மையான செய்திகள், கருத்தமைவுகள், பதிவுகள், பாடங்கள், படைப்புக்கள் என்று உண்மையை நோக்கியே உலக மாந்தரின் எண்ணங்கள், ஏக்கங்கள், ஆவல்கள், ஆதங்கங்கள் ஓங்கி நிற்கின்றன. உண்மை ஆட்சி செய்யும் உலகம் மலராதா? உண்மையின் அடித்தளத்தில் நன்மைகள், நலன்கள், நல்ல உறவுகள், உயர் மதிப்பீடுகள் தோன்றாதா? பொய்மையைப் பெரிதும் நேசிக்கும் போலிகளின் வெளிவேடங்கள், பிரமாண்ட பிரசாரங்கள், நிஜமற்ற சாம்ராஜ்ஜியங்கள் அழிந்திடாதா என்பதே அனைவரிடமும் அலைமோதும் ஆழமான ஆசையாகும். உண்மையை முழுமையாக உரக்க உரைத்தவர், அதற்காக உயிர் தந்தவர் இயேசு. பொய்மையைப் போற்றியிருந்தால் உயிரை உதிர்க்கும் உலகளாவிய அநீதி இயேசுவின் வாழ்வில் அரங்கேறியிருக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் முன்னோடி திருமுழுக்கு யோவானின் நிலையும் இதுதான். உண்மைக்கு விலையாகத் தன் தலையைத் தந்து, அதர்மத்தின் ஆட்சிக்கு அடிபணிய மறுக்கின்றார். கிறிஸ்துவை நேசிப்பவர்களின் கதியும் இதுவாகவே அமைகின்றது. உண்மைக்கு உயிர் தருவது, உயிரைக் கொடுத்தும் உண்மையை உரைப்பது இயேசுவின் அடியொற்றிகளின் அன்றாட அழித்தல் அழைத்தலாகிறது. உண்மைக்கான பேராபத்துக்கள் பெருமளவில் பெருகி பூதாகரமாகிடும் இன்றைய காலகட்டத்தில் இயேசுவின் சீடர்களின் பணி, பொறுப்பு, பங்கேற்பு இன்னும் பல மடங்கு பெரிதாகிறது.

இயேசுவின் சீடர்கள் இணைந்து, அமர்ந்து, இன்னும் அதிகமாகச் சிந்தித்து, உண்மையை உரைக்கும் உயர் மனிதர்களையும் ஒன்றிணைத்து, இயேசு போல உண்மைக்கு உயிர் தந்திட, உயிரையும் கொடுக்கும் நேரம் நெருங்கியுள்ளது என்பதே உண்மை.

உண்மைக்காகப் பல சவால்களைச் சந்திப்போம். சவால்களின் சங்கமத்தில், பல சத்திய சோதனைகளின் யுத்தத்தில், நம் பயணம் புது சரித்திரமாகிட நல்லவர்கள் எல்லோருடனும் இணைந்து, இலக்கு நோக்கிய இறையாட்சிப் பயணத்தில் முன்னேறுவோம்.

**“உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் வந்தேன்”**

அருட்சகோ. வி.ஜெ. யேசுதாஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி




அந்த ஊரில் அற்புதமாக மறைப்பணியாற்றி வந்த அருள்பணியாளர் ஒருவர் மீது பொறாமைகொண்ட ஒரு கூட்டம், அவர் மீது அநியாயமாய் பழிசுமத்தியது.

அக்கூட்டத்தின் புகார்களை நம்பிய நீதிமன்றமும் அவருக்கு மரண தண்டனை விதித்தது. அத்தண்டனை நிறைவேற்றப்படும் நாளில், அவர் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது சிறை அதிகாரிகள் அவரிடம், நீ கடைசியாகச் சொல்ல விரும்புவது ஏதாவது இருந்தால் சொல் என்றார்கள். அந்த அருட்பணியாளரோ, ஆண்டவர் என்னைக் காப்பார், ஆண்டவர் என்னைக் காப்பார் என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்ட எல்லாருக்கும் ஒரே வியப்பு. பின்னர் முகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டு, தலைவழியாகக் கழுத்தில் மரண தண்டனை கயிற்றை மாட்டினார்கள். ஆனால் அந்த அருட்பணியாளர் இறக்கவில்லை. ஏனெனில் அந்தக் கயிற்றில் முடிச்சு இருந்தது. அன்று வேடிக்கை பார்க்க வந்த கூட்டமும், இவர் உண்மையிலேயே குற்றமற்றவர் என்பதால்தான் இவர் நம்பியிருந்த ஆண்டவர் இவரைக் காப்பாற்றினார் என்று பேசிக்கொண்டது.

ஆம். தம்மை நம்புவோரை ஆண்டவர் கைவிடுவதே இல்லை. எனக்குப் பேசத் தெரியாதே, சிறுபிள்ளைதானே என்று, ஆண்டவரின் அழைப்புக்கு மறுப்பு தெரிவித்த இறைவாக்கினர் எரேமியாவுக்கு, எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல். அவர்கள்முன் அஞ்சாதே. ஏனெனில், உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன் (எரே.1:7-8) என்று ஆண்டவர் கூறிய வார்த்தைகள், இந்த அருட்பணியாளர் வாழ்விலும் உண்மையாயின.

## பார்வைகள் பலவிதம்!



நம் எல்லோருக்கும் கண்கள் ஒரே மாதிரியாகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பார்வையோ வித்தியாசப்படுகின்றது. சிலர் பல்லக்கைப் பார்க்கும்போது அதில் நாம் பயணிக்கமாட்டோமா என்று ஏங்குகிறார்கள். ஆனால் ஒரு சிலரோ அதை சுமப்பவர்கள் படுகின்ற உடல் வலிக்காக வருத்தப்படுகிறார்கள். எல்லாருக்கும் கருணையும், அன்பும் கண்களில் வந்து விடுவதில்லை. கடல் நீர் குடிக்க முடியாமல் இருக்கிறதே என்று அதைச் சபிப்பதைக் காட்டிலும் சுவையான உப்பை உற்பத்தி செய்ய உதவுகின்றதே என்று வாழ்த்துவது மேலான செயல். நாம் பிறரிடம் குறை காணும் போதெல்லாம் நம்மிடம் இருக்கும் குறைகள் தெறித்து விழுகின்றன. நிறைகளைக் காணும்போது இறைமையால் நிரம்பி வழிகின்றோம். அடுத்தவர்களின் உன்னதங்களை நேசிப்போம். நமது விலாசம் இன்னும் விசாலமாகும்.

## கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு

2022 ஆம் ஆண்டிற்கான

- அருள்வாக்கு
- வேதாகம நாட்குறிப்பேடு

பாலன்குடில், நத்தார் அலங்காரப் பொருட்கள், நத்தார் பரிசுப் பொருட்கள், நத்தார் மின்குமிழ்கள், நத்தார் மெழுகுவர்த்திகள்,

மோட்சபாதை, செபமாலைகள், திருப்படங்கள், செப நூல்கள் என்பன மலிவு விற்பனையில் உண்டு.

360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 222 9041


## மரண அறிவித்தல்



யாழ். காவலூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட **குயின்ரஸ் புவனேந்திரன் கொலின்ஸ்** அவர்கள் 05-12-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார், வில்லியம்ஸ் கொலின்ஸ், காலஞ்சென்ற உபகாரீற்றா (ராணி) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற யோசப் ஜோண், யேசு திரேசா(சுரோப்பியா) தம்பதிகளின் அன்பு மருமகனும், சிந்தியா ஜோதி அவர்களின் பிரியமான கணவரும், அலன் லினோ, யோவியன் லியோன், அரோன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆன் ஐரீன் ஜெயந்தி, றொய்ஸ் அன்ரனைனஸ், அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ், நீற்றா சிவந்தி, சுரேஸ் ஞானேந்திரன், டெலிற்றா கிரிசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அன்ரன் சிலுவைமுத்து, அனன்சியா, நொயல், சஜனா, றொசான் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ரோஜினி, டெல்மன், அலெக்ஸ்மன், எட்மன்ட் ஆகியோரின் சகலனும், மெலோனி-யுவன், மெலோன்-டெனிசா, மாயோ, ஜோயலின், செறோலின் ஆகியோரின் மாமாவும், அனிசன், அனோஜினி, அமலி, எவாஞ்சலின், சமந்தா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இறுதிச் சடங்கு திருப்பலியின் பின் கனத்தை மயானத்தில் 06-12-2021 அன்று நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்: குடும்பத்தினர்*

## 1ம் ஆண்டு நினைவுகளுடன்

மண்ணில் 05 . 01 . 1941

விண்ணில் 04 . 12 . 2020



அமரர்
### மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை

*நீங்கள் எம்மைப் பிரிந்து*
*ஓராண்டு ஓடி மறைந்தது*
*ஆயினும்*
*எம் விடியலிலும்*
*அஸ்தமனத்திலும்*
*உங்கள் நினைவுகளே வாழ்கின்றன*
*நினைவுகளில் என்றென்றைக்குமாய்*
*பிரியாத துயருடன் வாழ்கின்றோம்*
*அப்பா*
*எங்களின் சுமைதாங்கி நீர்*
*உமைச் சுமக்கின்றோம்*
*எம் நெஞ்சங்களில் இன்று*
*நித்திய அமைதி அருளும் இறையே*

செல்வபுரம்,
முல்லைத்தீவு

பிரிவால் துயருறும்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவுகள்

Ad- 94

## திருவழிபாடும்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

புனித யோசேப்பு, உலகளாவியத் திருஅவையின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்டதன் 150ம் ஆண்டின் நிறைவாக திருஅவையில் சிறப்பிக்கப்பட்டு வரும் புனித யோசேப்பு ஆண்டு டிசம்பர் 8ம் திகதி நிறைவடைகிறது. இந்த யோசேப்பு ஆண்டை முன்னிட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியதாவது:

அன்புச் சகோதரர்களே, சகோதரிகளே,

மீட்பு வரலாற்றில், புனித யோசேப்பின் பங்கு குறித்து இன்று சிந்திப்போம். நற்செய்திகளில் இயேசு "யோசேப்பின் மகனா"கவும் (லூக்.3:234:22 யோவா.1:45, 6:42), "தச்சருடைய மகனா"கவும் (மத். 13:55மாற்6:3) சுட்டிக்காட்டப்படுகிறார்.

இயேசுவின் குழந்தைப் பருவத்தை விவரிக்கும் நற்செய்தியாளர்கள் மத்தேயுவும் லூக்காவும், அதில் யோசேப்பின் பங்கிற்கு இடமளித்துள்ளனர். இவ்விரு நற்செய்திகளில் வழங்கப்பட்டுள்ள இயேசுவின் மூதாதையர் அட்டவணைகளில், இயேசு யோசேப்பின் மகனாகக் குறிக்கப்படுகிறார். அதேநேரம், யோசேப்பு, இயேசுவின் உயிரியல் தந்தை இல்லை என்பதும் உறுதிசெய்யப்படுகிறது. இருந்தபோதிலும், யோசேப்பு, இயேசுவிடம், உண்மையான தந்தைக்குரிய பண்பைச் செயற்படுத்துகிறார். யோசேப்பு, சமுதாயத்தில், விளிம்புநிலையில் உள்ளவராகத் தெரிகின்றபோதிலும், இவர், மீட்பு வரலாறு, கடவுளின் வாக்குறுதிகள் முழுமையாகநிறைவேறுவது ஆகியவற்றின் மையமாக உண்மையிலேயே இருக்கிறார். எனவே நாமும், நற்செய்தியின் மீட்பளிக்கும் செய்தியைப் பரப்புவதற்கு, நம் பங்கு எவ்வளவு சிறிய அளவில் இருந்தாலும், அப்பணியை ஆற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும், சமுதாயத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்களும், கடவுளின் மீட்புத் திட்டத்தில் ஒரு சிறப்புப் பங்கைக் கொண்டிருக்கின்றனர் என்பதையும், இது நினைவுபடுத்துகின்றது. நற்செய்தியாளர் லூக்கா, புனித யோசேப்புவை, இயேசு மற்றும் மரியாவின் பாதுகாவலராகச் சித்தரிக்கிறார். அதுபோலவே, வரலாற்றில் கிறிஸ்துவின் மறையுடலாம் திருஅவை தொடர்ந்து இருப்பதற்கு, புனித யோசேப்பு, உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராகத் தன் பங்கை ஆற்றிவருகின்றார். மேலும், நமக்கு முன்னும், நமக்குப் பின்னும் தொடரும் மனிதப் பிணைப்புகளின் முக்கியத்துவத்தை, பலநேரங்களில் காயப்பட்டுள்ள நம் உலகிற்கு, புனித யோசேப்பின் மூதாதையர் அட்டவணை நினைவுபடுத்துகின்றது. இந்தமனிதப்பிணைப்புக்களைஉறுதிப்படுத்தவும், உடன் பிறப்பு உணர்வோடு ஆற்றுகின்ற பிறரன்புப் பணிகள் வழியாக, நலிவுற்ற நம் சகோதரர், சகோதரிகளைப் பாதுகாக்கவும் வழிவகைகளைத் தேடும் போது, புனித யோசேப்பு நமக்காக, இறைவனிடம் பரிந்து பேசுகிறார் என்பதில் நம்பிக்கை வைப்போம், மற்றும், கடவுளின் மீட்புத் திட்டத்தில் அப்புனிதரது தாழ்மையான மற்றும், உண்மையான பங்கைப் பின்பற்றுவோம். *(நன்றி:நம்தோழன்)*


## Holy Cross School of Nursing

**Nurse Assistant**

NVQ LIV
Qualification - G.C.E. O/L
Duration - 18 Months

**Diploma in Nursing**
Qualification : G.C.E.A/L Completed
Duration : 3 Years
(2 Years Studies, 1 Year training with Salary)

*இதற்கான விண்ணப்பங்களை 20.12.2021 இற்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ளவும்.*

தொடர்புகளுக்கு: Holy Cross School of Health Science
767/4 Beach Road, Jaffna.
021 222 2423 – 077 115 9391

AD 93


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஒளிதர 26 . 04 . 1949

ஒளிபெற 17 . 12 . 2006



அமரர்
### யோண் பிலிப் அலோசியஸ்

*விண்ணகத் தந்தையே!*
*உம்மிடம் ஒளி பெற்றிருக்கும்*
*உமது அடியான் யோண் பிலிப் அலோசியஸ்*
*எமக்காக உம்மிடம் கேட்கும் வரங்களை நிறைவாகத்*
*தந்து எம்மை வழிநடத்த வேண்டுமென்று எங்கள்*
*ஆண்டவரும் உமது சுதனுமாகிய*
*இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கின்றோம்.*
*அன்புத் தந்தையே ஆமென்*

மனைவி பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்

243, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Ad95

## 1ம் ஆண்டு நிறைவு

மண்ணில் 12 . 10 . 1930

விண்ணில் 15 . 12 . 2020



அமரர்
### சந்தியாப்பிள்ளை ஆசீர்வாதம்

'சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத். 11:28)

அன்புடனே பண்பும் அறிந்து தந்து
கரிசனையுடன் கண்டிப்பும் கலந்து
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
எம்மை வளர்த்த அன்பு ஐயா

விண்ணகம் நோக்கிய உம் பயணத்திற்கு
விழிநீர் சொரிய விடைகொடுத்தோம்
வெறிச்சோடி விட்டதையா - நீங்கள்
வாழ்ந்திருந்த எங்கள் வீடு

ஓராண்டு காலம் எம் வீட்டில்
உன்நடமாட்டம் நிழலாகிப் போனதையா
நிஜமென்று நீர் சென்ற நிமலன் பாதம்
நின் ஆன்மா நித்தியமாய் இளைப்பாற
நிதமும் நாம் வேண்டுகின்றோம்

மாரீசன்கூடல்
இளவாலை

மறந்திட முடியா நினைவுகளுடன்
பிள்ளைகள் மற்றும் உறவுகள்

AD 91

# பாஷையூர்ப் பங்கில் உறுதிப்பூசுதல் திருச்சடங்கு



பாஷையூர் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் திருச்சடங்கு கடந்த ஞாயிறு இடம்பெற்றது. யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் 86 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை வழங்கி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம் அடிகள் இதற்கான ஒழுங்குகளை செய்திருந்தார்.

# தர்மபுரம் சவேரியார் ஆலயத்திருவிழா



முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத் திருவிழா பங்குத்தந்தை அருட்திரு நிக்சன் கொலின் தலைமையில் 04ஆம் திகதி சனிக் கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெற்றது. அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளார் தலைமையேற்றுத் திருநாள் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகப் பங்கு மக்கள் ஒன்றிணைந்து தமது பாதுகாவலரின் பெருவிழாவைக் கொண்டாடினார்கள்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கரித்தாஸ் உதவி



கியூடெக் - கரித்தாஸ் யாழ்ப்பாணம் நிறுவனத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வறிய பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உதவிகள் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 2019ம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து 2022 ஆனிமாதம் வரை வழங்கப்படுகிறது. இதற்கான நிதி உதவிகளைக் கரித்தாஸ் கொரியா நிறுவனம், கரித்தாஸ் இலங்கை-செடெக் நிறுவனத்தின் ஊடாக வழங்கி வருகின்றது. யாழ் மாவட்டத்தில் வசிக்கும் கத்தோலிக்க, இந்து மற்றும் முஸ்லிம் மாணவர்கள் 59 பேர் இதனால் பயனடை கிறார்கள். இம் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை 18-11-2021 வியாழக்கிழமை அன்று கியூடெக்-கரித்தாஸ் யாழ்ப்பாணம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் வளவாளராக திரு. செ. ஜோசப்பாலா அவர்கள் மாணவர்களைக் கல்வியில் ஆர்வமுடன் கற்பதற்கான பயிற்சி களை வழங்கினார். மாணவர்களின் பெற்றோருக்கும், பிள்ளைகள் மட்டில் அவர்களுக் குள்ள பொறுப்புணர்வு பற்றியும் கருத்தமர்வு நடைபெற்றது. அருட்தந்தை ச. இயூஜின் பிரா ன்சிஸ் அடிகளார், இயக்குநர் அவர்கள் மாணவர்களுக்கான கருத்துரையை வழங்கினார். செல்வி நித்திலா மரியாம்பிள்ளை, நிர்வாக அலுவலர் அவர்கள் இந்நிகழ்வை தலை மையேற்று நெறிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கில் மாணவர்கள் உற்சா கமுடன் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# பூநகரிப் பங்கு மறைக்கல்வி மாணவர்களுக்கான சுற்றுலா



பூநகரிப் பங்கின் மறைக்கல்வி மாணவர்களுக்கான சுற்றுலா ஒன்று கடந்த 04.12.2021 அன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இச்சுற்றுலாவில் 58 மறைக்கல்வி மாணவர்கள் பங்கே ற்றுப் பயனடைந்தார்கள். இச் சுற்றுலாவினை வன்னி கியூடெக் நிறுவனம் அனுசரணை செய்திருந்தது. அருட்பணி செபஜீவன் மற்றும் அருட்பணி அஜித் சுலக்ஷன் தலைமையில் மறைக்கல்வி மாணவர்கள் யாழ். நகரிற்கு இச் சுற்றுலாவினை மேற்கொண்டிருந்தனர்.

# பெரிய குருமடத்தில் சவேரியார் விழா



கொழும்புத்துறை புனித பிரான்ஸிஸ் சவேரியார் பெரிய குருமடத் திருவிழா கடந்த 03ம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு P.J. ஜெபரட்ணம் அவர்கள் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுப்பட்டது. திருப்ப லியைத் தொடர்ந்து மகிழ்வூட்டும் கள விளையாட்டுக்களும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மறைமாவட்டக் குருக்கள், குருமட மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மொண்பேட் சர்வதேச பாடசாலைக்கான மாணவர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன




சிறுவர்களின் முழுமையான கல்விமேம்பாட்டிற்காக யாழ்ப்பா ணம் அல்லைப்பிட்டி பகுதியில் மொண்பேட் துறவற சபை அருட்ச கோதரர்களால் அமைக்கப்பட்டு வருகின்ற மொண்பேட் சர்வதேச பாடசாலையின் 2022ஆம் கல்வி ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான பதி வுகளை மேற்கொள்வதற்கு உதவியாக எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு முன்பள்ளி சிறுவர்கள் தொடக்கம் தரம் 2 வரையான மாணவர்களுக்கான சேர்க்கைப் படிவங்கள் அங்கு விநியோகிக்கப்பட்வுள்ளன. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாகம் அவர்களின் தரிசனத்துடன் மொண்பேட் துறவற சபை அருட்சகோதரர் மரிய பிரகாசம் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் யாழ். கத்தோலிக்க திருஅவையில் முதன் முதலில் அமைக்கப்படும் ஆங்கில மொழி சர்வதேச பாடசாலை இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் இளையோருக்கான கூட்டொருக்கியக்கக் கருத்தமர்வு



பருத்தித்துறைப் பங்கின் அனைத்து ஆலயங்களையும் சேர்ந்த இளையோருக்கான வருடாந்த ஒன்றுகூடலும் கூட்டொருக்கியக்கம் பற்றிய கருத்தமர்வும் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 05.12.2021 நடைபெற்றது.

"இளையோரே எழுந்திடுவீர்" என்ற திருத்தந்தையின் அழைப்பினதும், "நம் இளையோ ரைக் காத்திடுவோம்" என்ற யாழ் மறைமாவட்ட ஆயரினது கருத்திற்கும் அமைவாக இக் கருத்தமர்வு அமைந்தது. இதை அமலமரித்தியாகிகள் சபையின் மறையுரைஞர்களுக்கான முதல்வர் அருட்பணி. ஜோசப் கமலானந்தன் அடிகள் வழிநடத்தினார். இதற்கான ஆயத் தங்களை பருத்தித்துறை மறைக்கோட்டத்தின் இளையோர் ஒன்றிய தலைவர் திரு. ஜெ. கட்சன் அவர்கள் பங்குத்தந்தையுடன் இணைந்து மேற்கொண்டார். இக் கருத் தமர்வில் 60 இற்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரியில் இலவச மருத்துவ முகாம்



அனைத்து சர்வமத தலைவர்களுக் குமான இலவச மருத்துவ முகாம் பூநகரி பங்கின் அடைக்கல அன்னை ஆலயத்திலே 07.12.2021 அன்று நடைபெற்றது. இதில் 100 இற்கும் அதிகமான மதத்தலைவர்களும் பொது மக்களும் பங்குபற்றி பய னடைந்தார்கள். இம் மருத்துவ முகாம் கிளிநொச்சி மாவட்ட செயல கத்தின் அனுசரணையுடன் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.